விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ சித்திரை மீ 22-ம் உ | புதன்கிழமை | (04 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 07 | ஓசை 45

## செப்புக்கம்பிக் கடத்தல் முறியடிப்பு

(சென்னை)

தூத்துக்குடிக்கு அப்பால் கடலில் நேற்று முன்தினம் இரவு இலங்கையைச் சேர்ந்த இயந்திரப் படகொன்றிலிருந்து சுமார் ஒன்றரை இலட்சம் பெறுமதியுள்ள ஐம்பத்திரண்டு பைகள் நிறைக்கப்பட்டிருந்த செப்புக்கம்பிகள் இந்தியச் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. வழக்கமாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது சுங்க அதிகாரிகள் குழு இந்தப் படகைக் கண்டு நிறுத்தும்படி எச்சரிக்கை செய்தும், அந்தப்படகு நிற்காது சென்றதால் அதனைத் துரத்திப் பிடித்து, அதிலிருந்த இலங்கையிலிருந்து கடத்திவரப்பட்ட இந்தச் செப்புக் கம்பிகளைக் கைப்பற்றினர். இந்த படகிலிருந்த இலங்கைப் பிரஜை ஒருவரும் இரண்டு இந்தியர்களும் கைது செய்யப்பட்டனர். வட பகுதிகளில் நிகழும் தொலைபேசிக் கம்பித் திருட்டுக்கும் இக்கடத்தல்காரர்களுக்கும் தொடாபுகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

# மாகாணசபை கலைப்பு; புதிய தேர்தல்

# புலிகள்-பிரேமா இவ்வாரப் பேச்சில் முடிவு!

(யாழ்ப்பாணம்)

வடக்குக்கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற்றியும் புதிய தேர்தலுக்குத் தேதியொன்றை நிர்ணயிப்பது பற்றியும் விடுதலைப் புலிகள் இவ்வாரம் ஜனாதிபதி பிரேமதாசாவை மீண்டும் சந்தித்துப் பேசும் போது வலியுறுத்தி ஒருமுடிவு எடுப்பார்களென்றும் அறியப்படுகிறது.

அதேசமயம் அரசாங்க தரப்புக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்குவற்கு முன்னரே மாகாண சபை கலைக்கப்படலாமென்றும் அரசியல் வட்டாரங்கள் கூறுகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு, பகேந்திரராசா (மாத்தயா) கட்சியின் பொதுச் செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி. அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இவ்வார இறுதியில் கொழும்பு செல்லவிருக்கிறார்கள்.

வடகிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமை, மாகாண சபை கலைப்பு, புதிய தேர்தல், ஆகிய முக்கிய விடயங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவைத் தாக்கிய கடற்படை வீரன் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை 1987 ஜுலை மாதம் கொழும்பில் வைத்து அணிவகுப்பு மரியாதையின் போது ரைபிளால் தாக்கியதற்காக சிறைவாசம் அனுபவித்து வரும் கடற்படைச் சிப்பாயான விஜமுனி விஜிதா றோதனசில்வா நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

நீதியமைச்சரின் சிபர்சைத் தொடர்ந்து இவரை விடுதலை செய்ய ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளதையடுத்து இவர் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டார்.

## இன்று சர்வகட்சி மாநாடு ஆரம்பமாகிறது

(கொழும்பு)

சர்வகட்சி பாநாடு பிரதிநிதிகள் குழு கூட்டம் இன்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய கூட்டத்தில் அடிப்படை உரிமைகள், பொதுசனத் தொடர்பு சாதனங்கள், பாதுகாப்பு ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இந்தக் கூட்டம் இம் மாதம் 20 ஆம் திகதி வரையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது புதுவருடத்தன்று நடைபெறமாட்டாது.

இளைஞர்கள் அமையின்மை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்த கருத்துக்களும் இங்கு ஆராயப்படவுள்ளன.

## நகர வீடமைப்புக் கடன்பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

பதினைந்து லட்சம் வீடமைத்திட்டத்தின் கீழ் நகர வீடமைக்கடன் பெறுபவர்களுக்கு இன்று 4-ஆம் திகதி முதல் 25-ஆம் திகதி வரையும் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபை பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய இடங்களில் இரண்டு ரூபா செலுத்தி இந்த விண்ணபபப் படிவங்களைப்பெற்றுக்கொள்ளலாம் என யாழ். தேசிய வீடமைப்பு அபிவ்ருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

பதினைந்து லட்சம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடன் பெறுநர் பட்டியலில் பதிவு செய்தவர்கள் பட்டுமே இக்கடனைப்பெற முடியும்.

விண்ணப்பிப்போர் 18-50 வயதுக்கு இடைப்பட்டவராக

(8ஆம் பக்கம் பார்க்க)

ஜே. வி. பியிடமிருந்து-

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் 7ஆம் திகதி அழிக்கப்படும்

(கொழும்பு)

ஜே. வி. பி. இயக்கத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இம் மாதம் 7ஆம் திகதி இராணுவ தலைமையகத்தில் வைத்து அழிக்கப்படவுள்ளன.

அண்மைக் காலங்களில் இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட சுமார் இரண்டாயிரம் ஆயுதங்களே இவ்வாறு அழிக்கப்படவுள்ளன.

இந்த வைபவத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா உட்பட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்.

## சந்திரிகா கொழும்பு வருகை எதிர்க்கட்சிகளுக்கு குழப்பம்

(கொழும்பு)

காலம் சென்ற மக்கள் கட்சித் தலைவர் குமாரதுங்காவின் மனைவியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகளுமான சந்திரிகா லண்டனில் இருந்து தனது இரண்டு பிள்ளைகளுடன் கொழும்பு திரும்பியுள்ளார்.

இவரின் கொழும்பு வருகை பிரதான எதிர்க்கட்சிகளின் அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றில் சில பிரச்சினைகள் தோன்ற வாய்ப்புண்டு எனக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்திற்கு அன்னையின்

யாழ்ப்பாணம் மாநகர சபை பருத்தித்துறை நகரசபை, வல்

காரசபை மாவட்ட முகாமை யாளர் அறிவித்துள்ளார்.

வயதுக்கு இடைப்பட்டவராக

(8ஆம் பக்கம் பார்க்க)

டன் கொழும்பு திரும்பியுள்ளார்.

தோன்ற வாய்ப்புண்டு எனக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டத்திற்கு அன்னையின் தியாகம் உந்து சக்தியாகும்

(அச்சுவேலி)

அன்னை பூபதியின் தியாகம் தமிழ் ஈழ விடுதலைக்கு உந்து சக்தியாக நின்று விளங்குவதுடன் அன்னை பூபதியின் பெயர் தமிழ் இனம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

இவ்வாறு முன்னாள் சுகாதரப் பரிசோதகர் திரு கே. பேரின்பநாயகம் அன்னை பூபதியின் நினைவாக அச்சுவேலி பஸ்நிலையத்தில் நடைபெற்ற அடையாள உண்ணா விரதத்தைஆரம்பித்துவைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மிக இக்கட்டான சூழலில் துணிந்து அன்னை பூபதி உண்ணாநோன்பிருந்து இந்திய இராணுவத்தின் அடாவடித்தனத்தை அகில உலகிற்கும் அறியச்செய்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலையில் சிறுவர் அனுமதி தலையீடு இருக்கக் கூடாது

(கொழும்பு)

-லலித்

நாட்டிலுள்ள பாடசாலைகளில் சிறுவர்களை அனுமதிக்கும்போது எந்தவித தலையீடுகளும் இருக்கக்கூடாது என புதிய கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்

புதிய அமைச்சராக பதவியேற்றபின்னர் அவர் அமைச்சுக்களுக்குச் சென்று அதிகாரிகள் மத்தியில் பேசினார்.

கல்வியமைச்சு நடவடிக்கைகள் தொடர்பாக பூர்வாங்க மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள தாம் எண்ணியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்

பாடசாலைகளில் பிள்ளைகள் அனுமதிப்பதில் பல மோசடிகள் இடம் பெறுவதாக கல்வியமைச்சுக்கு புகார்கள் வந்துள்ளதாகவும் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது.

# யாழ். இரவு தபால் ரயிலில் 2ஆம் வகுப்பு படுக்கை இல்லை

(கொழும்பு)

கொழும்பு - காங்கேசன்துறை இரவு தபால் ரயிலில் இன்று 4ஆம் திகதி முதல் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதிகள் (போத்) நிறுத்தப்படவுள்ளதாக ரயில்வே பகுதி அறிவித்துள்ளது.

இதனையடுத்துநாளை 5ஆம் திகதி முதல் மேலதிக மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கை வசதி பெட்டிகள் (சிலிப்பறேற்ஸ்) பொருத்தப்படவுள்ளன.

அத்துடன் முதலாம் வகுப்பு படுக்கை வசதிகொண்ட ரயில் பெட்டிகளும் இணைக்கப்படும் உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பயணம் செய்வதற்கு வசதியாகவே இது இணைக்கப்படுகிறது.

இதேசமயம் இரவு தபால் ரயிலில் பயணிகள் இடமின்றி நெருங்கியபடி பயணம் செய்வதை தினமும் காண முடிகிறது! சில பெட்டிகளில் போதிய வெளிச்சம் இன்றி காணப்படுகிறது.

# திருமலையில் உயர் அதிகாரிகள் வேலைக்கு சமுகமளிப்பதில்லை

(திருக்கோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள் அல்லது திணைக்களங்களில் கடமையாற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் மார்ச் மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறியதனால், பொதுமக்களின் தேவைகளான நீர் விநியோகம், மின்சாரம் வழங்கல்' போக்குவரத்து, வங்கித் தொழில் ஆகியன பாதிப்புக்குள்ளாகியுள்ளதாம்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் எஸ். கணேசானந்தன் அவர்கள் அலுவலக அறையில் ஆளு

(8ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பாராளுமன்ற புதிய கூட்டம்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகும் பாராளுமன்றக் கூட்டத்தொடரை சம்பிரதாய ரீதியாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆரம்பித்து வைப்பார். இவ்வைபவத்தில் ஜனாதிபதி பிரேமதாசா ஆற்றும் உரையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிலைமை பற்றியும் ஆறாவது திருத்தச் சட்டம் சம்பந்தமான விடயங்கள் இடம்பெறும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

# பாராளுமன்றக் கூட்டத்தை எதிர்க்கட்சிகள் பகிஸ்கரிக்கலாம்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகும் பாராளுமன்ற இரண்டாவது கூட்டத் தொடரில் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், நவசமாஜக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொள்ள மாட்டார்கள் எனத் தெரிய வருகின்றது.

அரசாங்கத்தினால் மனித

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ரஜரட்ட ரஜனி கடுகதிரயில் வவுனியாவரை சேவையாற்றும்

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வட பகுதிக்கு இரண்டு மேலதிக ரயில் சேவைகளை நடாத்த போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வன்னிப் பகுதி மக்களின் நலன் கருதி அனுராதபுரம் வரையும் சேவையிலீடுபடும் ''ரஜரட்ட ரஜனி'' கடுகதி ரயில் இம்மாதம் 6ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை தினமும் வவுனியா வரையும் சேவையிலீடுபடவுள்ளது.

அதேபோல 6ஆம் திகதியும் 12ஆம் திகதியும் கொழும்பு கோட்டையிருந்து விசேட ரயில் இரவு 10 மணிக்கு புறப்படும் இவை 9ஆம், 12ம் திகதிகளில் காங்கேசன் துறையிலிருந்து மாலை 5-45க்கு புறப்படும்.

ரஜரட்ட ரஜனி கோட்டையிலிருந்து 2-05க்கு புறப்பட்டு இரவு 8மணிக்கு வவுனியாவைச் சென்றடையும்.

# மூதூர் மக்கள் வங்கிக் கிளை திறக்க ஏற்பாடு

(திருகோணமலை)

மூதூர் மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் திறந்து கருமங்களை ஆற்ற மக்கள் வங்கி உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மைக் கால சம்பவங்களால் இந்தக் கிளை திருக்கோணமலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

திருக்கோணமலைப் பகுதியில் நிலமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் மீண்டும் மூதூரில் இதனைத் திறந்து வங்கி வேலைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வாழைப்பழ கடையில் ஏற்பட்ட தீயை வகுப்புவாதத் தீயாக்க மாற்ற முயற்சி

## கல்முனைச் சம்பவத்துக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

(கல்முனை)

வாழைப்பழக்கடையில் தற்செயலாக ஏற்பட்ட மின்னொழுக்கினால் சருகுகளில் பற்றிக்கொண்ட தீ சில கடைகளை சேதப்படுத்தியதை வைத்துக்கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு வகுப்புக்கலவரத்துக்கு கொள்ளி வைப்பதற்குக் கொழும்பிலுள்ள சிங்களப் பேரினவாதப் பத்திரிநிறுவனங்களும் சிங்களப் பேரினவாதிகளும் பெரும் முயற்சி செய்கிறார்களென்பது வெளிவரும் செய்திகளிலிருந்து நன்றாகத்தெரிகிறது.

கல்முனையில் ஐந்து கடைகள் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய சிலரினால் தீவைத்துக் கொழுத்தப்பட்டதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்தின் பத்திரிகைச் செய்திகள் வெளிவந்தன.

கல்முனையில் இனந்தெரியாத ஆயுதந் தாங்கிய இளைஞர்கள் எவருமில்லை என்பது கல்முனைப் பகுதிகள் மட்டுமல்ல மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப்பகுதி மக்கள் அனைவரும் நன்கறிந்ததே.

கல்முனையில் தற்செயலாக ஏற்பட்ட இத் தீ விபத்துக்கு வகுப்புவாதமூலம் பூசி தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் சிண்டு முடித்து மீண்டும் ஒரு பெரும் கலவரத்தை மூட்டிவிடவும் அந்நியப் படை பொன்றை இங்கு கொண்டு வரவும் சில சக்திகள் இன்ன

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயந்திநகரில் அன்னை பூபதி நினைவுநாள்

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அன்னை பூபதியின் ஞாபகார்த்த எழுச்சி விழா இன்று புதன்கிழமை மாலை கிளிநொச்சி ஜெயந்திநகரில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விருந்தோக்கு

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோறெக் கோடிங்கிற்கும், ரி.வி.அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகல விதமான ரி.வி டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளநாடவேண்டிய இடம்: NEW VENUS No:60, Stanley Road Jaffna. (B-538)

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட உழுந்து மா, கிலோ ரூ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M. No·777 K.K.S Road, Jaffna. (B-507)

### சேவை

Rajz Brand எவர்சில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டு பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள் பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் Rajz Brand பார்வை அறை AS தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம்.

3/414


## எமது கலை கலாசாரத்தை பேணிப்பாதுகாக்கவேண்டும்

### உதவி அரசாங்க அதிபர் பேச்சு

(பண்டத்தரிப்பு)

தமிழினத்தின் தனித்துவமான கலை கலாசார பாரம்பரியங்களைப் பேணி, அவற்றின் மகிமை குன்றாது வளர்த்து அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டிய பொறுப்பு இன்றைய சமுதாயத்திற்குரியது.

இவ்வாறு சங்கானை உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் வட்டுக்கோட்டை கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்தை சம்பிரதாயமாகத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், சனசமூக நிலையங்கள் வாழும் மக்களின் பிரதிநிதிகளாக எமது கலை கலாசார நல்லொழுக்கங்களை வளர்க்க வேண்டும். எம்மக்கள் அறிவுள்ள மக்களாக வாழ வழி வகுக்கும் பொறுப்பு சனசமூக நிலைய நிருவாகத்தையே சாரும்,

நல்ல அறிவு நூல்களைத் தேடி இங்கு வைத்து வாசிக்கச் செய்ய வேண்டும். பத்திரிகை வாசிப்புடன் நின்று விடக்கூடாது. ஏனைய துறைகளும் இடம்பெற வேண்டும்.

## நூல் அறிமுகம்

தெல்லிப்பளை கலை, இலக்கியக் களத்தின் இருபத்தெட்டாவது ஒன்றுகூடல் நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை 17-04-1990 பி. ப. 3 மணியளவில் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும். கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமை தாங்குவார். குறமகள் கதைகள் நூல் அறிமுக விழா நடைபெறும். அறிமுகவுரையை திருமதி கோகிலா மகேந்திரன் ஆற்றுவார். திருமதி மௌனகுருவும், திரு. பி. நடராசனும் ஆய்வுரைகளை மேற்கொள்ளுவார்கள். குறமகள் பதிலுரை ஆற்றுவார்.

## காத்தான்குடி பள்ளிவாசல்கள் மசூதிகள் சம்மேளனத்தின் கீழ்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பள்ளிவாசல்கள், மசூதிகள் சம்மேளனம் புதிய நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகிகள் தெரிவில் அல்ஹாஜ் அ மு. மீராசாகிபு தலைவராகவும், மௌலவி எம். யாசீன் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்-முஸ்லிம் சமூக ஒற்றுமை, சமாதானம் ஆகியவற்றிற்காக தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதே தமது குறிக்கோள் என சம்மேளன பிரமுகரொருவர் ஈழநாதத்திற்கு தெரிவித்தார். (37)

## நல்லின தென்னங்கன்றுகள்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு நல்லினத் தென்னங்கன்றுகள் விரைவில் விநியோகிக்கப்பட உள்ளதாக யாழ். மாவட்ட கமநல சேவைத்திணைக்கள ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் தெரிவித்துள்ளார். (24)


யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 4.40 4.45 7 00
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


## புதிய நீதியமைச்சர் முயற்சியால் 800 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

புதிய நீதியமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் எடுத்த நடவடிக்கைகளையடுத்து சுமார் எண்ணூறு கைதிகள் நேற்றுக் காலை சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாண்டு டிசம்பர் மாதம் வரை சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிக்க வேண்டுஎன அமைச்சர் ஹமீத் ஜனாதிபதியிடம் சிபார்சு செய்திருந்தார். இதனையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு மன்னிப்பு வழங்குவதால் முன்னால்படையினர், பொலிஸார், கூட்டுத்தாபன அரசாங்க ஊழியர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

போதை வஸ்து தொடர்பாக சிறையிலிருக்கும் கைதிகள் விடுவிக்கப்படமாட்டார்கள் என நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## பாதை ஓர வியாபாரிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் உள்ள பாதையோர கடைக்காரர்களை அழைத்து நாளை மாநகர சபை ஆணையாளர் ஒரு கூட்டம் வைக்க உள்ளார். இதில் பாதையோர வியாபாரிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும்.

மேலும் பத்திரிகைக் கடைக்காரர்களும் வீதியை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது கவனிக்கக் கூடியதாக இருப்பதாகவும் இவர்கள் உடன் எச்சரிக்கை செய்யப்படுவார்கள் என யாழ் மாநகர அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். (லோ)


## அறிவிப்பாளர்கள் தேவை

சுன்னாகத்தில் விரைவில் ஆரம்பமாகவிருக்கும் விளம்பர சேவைக்கு ஆண், பெண் அறிவிப்பாளர்கள் தேவை. குரல்வளமுடையோர் கல்வித்தகைமையுடன் 10. 04. 90 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

SHAN ADVERTISING SERVICES JAFFNA

நிர்வாகி
ஷண் அட்வடைசிங் சேவிஸஸ்
பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.

(R/68)


## சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

கோண்டாவில் கொட்டைக்காடு மயானம் அண்மையில் கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்களினால் சிரமதானப் பணியில் திருத்தியமைக்கப்பட்டது.

சனசமூக நிலையத்தினர் முன்வந்து செய்த இச் சிரமதானப்பணியை இப்பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். (24)

## கனகபுரத்தில் பஞ்சலிங்கம் வீதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள பல சமூக சேவை ஸ்தாபன உயர் பதவிகளை வகித்து அகாலமரணமான பஞ்சலிங்கத்தின் ஞாபகார்த்தமாககனகபுரத்திலுள்ள வீதி ஒன்றுக்கு ''பஞ்சலிங்கம் வீதி'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மேற்கு சமாதான சபைத் தலைவர் எஸ். சிவராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் விடுதலை புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி நகர அமைப்பாளர் நிமால் கலந்து கொண்டு பஞ்சலிங்கம் வீதியை திறந்து வைத்தார்.

அதன் பின் திருநகர் கிருஷ்ணன் கோவில் முன்றலில் சிவராசலிங்கம் தலையில் நடைபெற்ற அமரர் பஞ்சலிங்கம் ஞாபகார்த்தக் கூட்டத்தில் நிமால், நா. சோதிநாதன் (கொத்தணி அதிபர்) டாக்டர் கே. வி. கே. திரு. லோகமூர்த்தி, கிளிநொச்சி சிற்றூர்

## சட்டவிரோத மது விற்பனை தடை

(கல்லாறு களுவாஞ்சிக்குடி)

பெரிய கல்லாற்றில் சட்ட விரோத மது விற்பனை நிலையங்களுக்கு உடனடியாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஒலிபெருக்கி மூலம் இன்று புலிகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கிராமத்தில் பிரவேசித்து ஓரிரு தினங்களில் சட்ட விரோத மின் இணைப்புக்களும் அகற்றப்பட வேண்டுமென அறிவித்தனர். இதனைத் தொடர்ந்து சட்ட விரோதமாக சில வருடங்களாக மின் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டோர் தங்கள் மின் இணைப்புக்களை அகற்றியதும் குறிப்பிடத்தக்


உடன் தேவை

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

1. பதவிகள்:- நிறைவேற்று அலுவலர் / கணக்காளர்.
2. வயது: 45 -- 55
3. தகுதி (2) அரசாங்க / கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்கள் இத்தகைய வெற்றிடங்களுக்கு தமது தராதரப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கலாம்.
4. சம்பளம்:- 1) நிறைவேற்று அலுவலர் சகலமும் உட்பட மாதம் 2500/- ரூபா
   2) கணக்காளர் மாதம் 2250/-
5. பிணைப்பணம்:- ரொச்சம் ரூபா 5000/- (வட்டியுடன் மீளக் கொடுக்கப்படும்)
6. விண்ணப்பமுடிவுத் திகதி:- 15 - 04 - 1990
7. (1) கல்வித்தராதரம்:- க பொ. த (உயர்தரம்) மற்றும் உயர்கல்வி சான்றுகள்.
   (2) இந்துவாகவும், ஆலய அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும.
   (3) அனுபவம்:- முன் அனுபவம் பற்றிய 2 சான்றுப் பத்திரங்கள்.


## இந்து ஆலயத்திற்கு நிதி ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண கல்வி, கலாசார, அமைச்சு செயலாளர் திரு இ. ஜே. சற்குணராஜா உதவி பணிப்பாளர் திரு எஸ். எதிர்மன்னசிங்கம் சகிதம் அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களில் நடைபெறும் புனரமைப்பு பணிகளை பார்வையிட்டார்.

காரைதீவு சண்முகி அம்மன் ஆலயம், சித்தானைக்குட்டி சமாதி நிலையம், பாலையடி

## மூதூரில் மெய்வல்லுநர் போட்டி

(மூதூர்)

தேசிய சேவை இளைஞர்

(மூதூர்)

தேசிய சேவை இளைஞர் மன்றத்தால் நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் இப்பகுதி அயற்கிராமங்களிலிருந்து இளைஞர்கள் பலர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

கே. வி. கே. திரு. லோகமூர்த்தி, கிளிநொச்சி சிற்றூர் அளவை உறுப்பினர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, கிளிநொச்சி கலை கலாச்சார பேரவை தலைவர். வீரசிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (13)

## சாரதா சேவாச்சிரமத்தில் கம்பியூட்டர் பயிற்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கம்பியூட்டர் பயிற்சி நெறியொன்றை நடாத்தவுள்ளது.

இக் கம்பியூட்டர் பயிற்சி நெறியின் பயிற்சி ஆசிரியையாகப் பணியாற்றவுள்ளசெல்வி. இந்துமதி தெய்வநாயகம் அன்னை சாரதா தேவியின்புலமைப்பரிசில்பெற்று தற்போது கம்பியூட்டரில் விசேட பயிற்சி பெற்று வருகிறார்.

சேவாச்சிரமம் இலவச ஆங்கில வகுப்புக்களையும் நடாத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளது. (25)


## அக்குபங்சர் வகுப்புகள்

பயிற்சி வகுப்புகள் யாவும்
**1-5-90**இல் ஆரம்பமாகின்றன.

(1) அக்குபங்சர் பயிற்சி M. Ac.F.
(ஆங்கிலமொழி மூலம்)
(சர்வதேச பல்கலைக்கழகப் பரீட்சை)

போதனாசிரியர் Dr. V. S. K. சிவலோகநாதன்

2. அக்குபங்சர் பயிற்சி M. Ac. A.
(தமிழ்மொழி மூலம்)
((இலங்கை அக்குபங்சர் சங்கப் பரீட்சை)

போதனாசிரியர் Dr. V. P. சுந்தரராஜன்

பிரதம பரீட்சையாளர்
பேராசிரியர் Dr. அன்ரன் ஜெயசூரியா அவர்கள்

வைத்தியர்களும், வைத்திய மாணவர்களும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வகுப்புகள் நடைபெறும்.

விபரங்களுக்கு:-

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(R,72)



வியாபாரம்

பெருக.

விளம்பரம் செய்க


களை மீள இணைப்புக்களை அகற்றியதும் குறிப்பிடத்தக்கது. இதனால் சட்டப்படி மின் இணைப்பு பெற்றோர் இதுவரை அனுபவித்தஅசௌகரியங்களும் நீங்கியது.

புலிகளால் மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகள் மக்களின் அமோக ஆதரவை பெற்றுவருவதாக கல்லாறு புலிகள் பொறுப்பாளர் 'சீனு' தெரிவித்தார். (45)


(3) அனுபவம்:- முன் அனுபவம் பற்றிய 2 சான்றுப் பத்திரங்கள்.

இங்ஙனம்
ஆ. தியாகராசா
கௌரவ செயலாளர்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(B / 477)


சமாதி நிலையம், பாலையடி விக்கினேஸ்வரர் ஆலயம், காரையடி பிள்ளையார் கோவில், வீரபத்திரர் ஆலயம் ஆகியவற்றிற்கு அமைச்சு தலா 50, 000 ஒதுக்கீடு செய்தது.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட ரூபா 12,500 க்கான வேலைகளை பார்வையிட்டு திருப்தி தெரிவித்தார்.


அன்னை பூபதிக்கு

கைதடி

மக்கள் சார்பில் எமது

## அஞ்சலிகள்



ஸ்ரீ கணேசா ஸ்டோர்ஸ்

கண்டி வீதி,

கைதடி.

(R/64)



அன்னை பூபதியின் நினைவாக

தீவக மக்கள் சார்பில்

## கண்ணீர் அஞ்சலி



போர் வந்தே முத்தமிடும்
போதினிலே எம் வாழ்வு
ரத்தத்தில் நீச்சலிடுந் தெப்பம்! ஈழ
யுத்தத்தில் உன் உயிர்தானே கப்பம்
தாயே!

காரைநகர் ப, நோ, கூ. சங்கம்

தலைவர், நெறியாளர் குழு,

ஊழியர்கள், சார்பில்

(B/557)

# இஸ்ரேல் தாக்குமேயானால் ரசாயன ஆயுதங்களால் அழித்துவிடுவோம்

## -சாதாம் உசைன்

(பாக்தாத்)

இஸ்ரேல் ஈராக்கைத்தாக்குமேயானால் இரசாயன ஆயுதத்தின் மூலம் இஸ்ரேலின் பெரும் பகுதியை அழித்துவிடுவோம் என ஈராக்கின் ஜனாதிபதி சாதாம் உசைன் பாக்தாத் டெலிவிசனில் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் இருந்து அணுவாயுதத்தை இயக்கும் கருவிகளை ஈராக் கடத்தியதுஎன்ற குற்றச்சாட்டை மறுதலித்து டெலிவிசனில் ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமது நாட்டு மக்களுக்காக ஆற்றிய இவ்வுரையில் தங்களிடம் அணுவாயுதங்கள் எதுவும் இல்லை என்றும் இரட்டை இரசாயன ஆயுதங்கள் இருக்கும்போது அணுவாயுதத்தின் தேவை இல்லைஎன்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டுஇரசாயன பொருட்கள் வெடிக்கும் போது இரண்டும் கலந்துநரம்பை பாதிக்கும் வாயுவைவெளிவிடுவதைஅவர் இவ்வாறு இரட்டைஇரசாயன ஆயுதம் என குறிப்பிட்டிருக்கிறார். இதுவரை அவற்றைத் தாம் பயன் படுத்தவில்லை என்றும் இஸ்ரேல் தம்மைத் தாக்கினால் இவற்றின் மூலம் பாதி இஸ்ரேலை அழித்து விடுவோம்என்று கூறியிருக்கிறார்.

இப்படியான புதியதோர் இரசாயன ஆயுதம் இருப்பதை ஈராக் ஒப்புக் கொண்டது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் ஈராக் - ஈரானின் போரின் போது ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததுஎன்பது குறிப்பிடத்தக்கதோடுகுர்திஷ் இனத்தவருக்கு எதிராகவும் பாவித்ததாகவும் முன்னர் குற்றச் சாட்டு எழுந்ததுவும் குறிப்பிடத் தக்கது.

அதேவேளை ஈராக் அணுவாயுத உற்பத்தியில் குறிப்பிடக் கூடிய அளவில் முன்னேறி விட்டதாக மேற்கத்தைய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. ஈராக்கின் இவ் அணுவாயுத முன்னேற்றம் ஈராக் ஈரானிய போரின் போது எட்டப் பட்டது எனக்கருதப் படுகின்றது.

அதேவேளை இஸ்ரேலிய விமானங்கள் முன்னர் ஈராக்கிய அணுஉலைகளைத் தாக்கி அழித்தமையும் குறிப்பிடத் தக்கது.

# கொள்கலன் வெடித்ததால் சிட்னியில் தீ; மக்கள் சிதறிஓட்டம் விமான நிலையம் மூடப்பட்டது

(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் சிட்னி நகரில் சென்ற ஞாயிறன்று காஸ் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் காஸ் கொள்கலன்கள் பெரும் சத்தந்துடன் வெடித்தன மக்கள் பீதியினால் தமது வீடுகளை விட்டு நலாபக்கமும் சிதறி ஓடினர். சிட்னி விமான நிலையம் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டது.

பொறல் தொழிற்சாலையிலிருந்து தெற்கு சிட்னிக்குத் தீ பரவத் தொடங்கியதும் பொலிஸார் வீதித்தடைகளை ஏற்படுத்திபோக்குவரத்தை வேறு பக்கமாகத் திருப்பினர். இதே வேளை ஹிங்டன் ஹொட்டலில் தங்கியிருந்தவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

வெடி அதிர்ச்சியினால் அயலில் இருந்த வீடுகளின் யன்னல்கள் சிதறின. வீடுகள் அதிர்ந்தன. தீப்பிழம்புகள் வானத்தை நோக்கி எழுந்தன.

தீ மாலை 8 45 மணியளவில் ஆரம்பித்ததென்றும், அந்நேரத்தில் அந்த வாயுக்கொள்கலன்கள் அருகே ஒருவரும் இல்லாததால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதலாவது பாரிய வெடிச் சத்தத்துடன் பரவிய தீ ஆறு மணி நேரத்துக்குள் அணைக்கப்பட்டதென்றாலும் தொடர்ந்து இரு கொள்கலன்கள் வெடித்ததால் நெருப்புடன் கூடிய பாரிய சத்தங்கள் கேட்டன.

பாதுகாப்புக் காரணமாக 2 கி.மீ. சுற்றாடலில் உள்ளவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

## விலைமதிப்பீட்டு இலாகாவின் நிலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விலைமதிப்பீட்டுத் திணைக்கள தலைமைக் காரியாலயம் முறையாக சேவையாற்றுவதற்கு முடியாத நிலையில் உள்ளது.

இக்காரியாலயம்வீடமைப்புத்திணைக்களக் கட்டிடத்திற்கு மீண்டும் செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விலை மதிப்பீட்டுத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கன்னாத்திட்டிவீதியில் உள்ள இந்த அலுவலகத்தில்தொலைபேசிவசதிகளோ, வாகன வசதிகளோ எதுவும் எமக்கில்லைஎனவும் இதனால் தாம் வட, கிழக்கு மாகாண

பிரதமவிலை மதிப்பீட்டு அதிகாரிக்கும், யாழ் அரசாங்க அதிபருக்கும், வீடமைப்பு திணைக்கள அதிகாரிகளுக்கும் மகஜர் ஒன்று அனுப்பி உள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (லோ.)

# காஷ்மீரில் தொடரான ஊரடங்கால் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் காஷ்மீர்மாநிலத்தில் கடந்த இரண்டு மாதமாக ஊரடங்கு உத்தரவு நீடித்திருப்பதால் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுஇருக்கிறது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற கைதிகள் தப்பியோட்டம் சம்பவத்தை அடுத்து அங்குபோக்குவரத்து மேலும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் பொருட்கள் வருவது மேலும் குறைந்திருக்கிறது.

அத்துடன் கனத்த மழையும் உறை பனியும் பெரிதும் மக்களைபாதித்துள்ளன. காய்கறி, பழங்களின் உற்பத்தி இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. ஆதலால் இப்பொருட்கள் மக்களுக்கு கிடைப்பது அரிதாகி விட்டது. அரச விமானம் மூலம் இந்நடவடிக்கையை நிவர்த்தி செய்தபோதும் ராணுவத்திற்கும் பொலிசாருக்குமே அவை போதவில்லை. மத்திய பொலிசார் 3000க்கும் அதிகமானோர் காஷ்மீரில்இருப்பதுகுறிப்பிடத்தக்கது.

# சிம்பாம்வேயில் முகாபேயின் ஆளும் கட்சி அமோக வெற்றி

(ஹராரே)

சிம்பாப்வேயில்சென்ற ஞாயிறன்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் றோபேட் முகாபே வெற்றி பெற்றார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது 1980-இல் சிம்பாப்பே சுதந்திரமடைந்ததில் இருந்து முகாபே அந்நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் என்பது குறிப்பிடத் தக்கது.

முகாபேயுடன் போட்டியிட்ட சிம்பாப்வே ஐக்கிய இயக்க வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டதோடு, சமகாலத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலினும் முகாபேயின் ஆளும் கட்சி வெற்றியீட்டியது.

வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் தமக்கு போதிய இடம் தரவில்லையென்றும், தமது ஆதரவாளர்களும் வேட்பாளர்களும் ஆளும் கட்சியினரால் பயமுறுத்தப்பட்டதாகவும் தேர்தலுக்கு முதல் தமது முக்கிய வேட்பாளர் ஒருவர் சுடப்பட்டு பாரிய காயங்களுக்குள்ளானர் என்றும் சிம்பாப்வே ஐக்கிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

சிம்பாம்பே ஐக்கிய இயக்கம் தேர்தலில் தோல்விகண்டபோதும் ஐரோப்பிய நாடுகளில் தற்போது பிரச்சினைக்குள்ளாகியிருக்கும் ஒரு கட்சி ஆட்சி போன்ற ஒரு ஆட்சி அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற முகாபேயின் கொள்கைக்கு எதிராக சிம்பாப்வே மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்று சிம்பாம்பே ஐக்கிய இயக்கத்தின் தலைவர் எட்சர் ரெக்கறி சுட்டிக்காட்டியுள்ளார். இவர் ஜனாதிபதி தேர்தலில் முகாபேக்கு எதிராகப் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு கட்சி ஆட்சியை அமைக்கப்போவதாக பிரச்சாரம் செய்து வந்த முகாபே அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதனால், எதிர்க் கட்சிகள் 'இறுதி மரணத்தை'த் தழுவிக்கொண்டுள்ளார்கள் என்று வாக்காளர்களுக்கு அறிவித்துள்ளனராம்.

தேர்தல் முடிவுகளின்படி முகாபே 2,076, 926 வாக்குகளைப் பெற்று 120 ஆசனங்களில் 116 இடங்களைப்பிடித்துள்ளார். எதிரணியினரான மூன்று கட்சிகளைக் கொண்ட சிம்பாப்வே ஐக்கிய இயக்கம் 413, 840 வாக்குகளைப்பெற்றுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் 2.587.204 வாக்குகள் பயப்பட்டன என்றும் இதுபதியப்பட்ட வாக்குகளில் 54 விகிதம் என உத்தியோக வட்டாரங்கள் தெரிவித்தன. இதே வேளை ஜனாதிபதி தேர்தலில் 146,388 வாக்குச் சீட்டுகள் பழுதடைந்துள்ளன.

# தென்னாபிரிக்க ஜனாதிபதி - தேசீயதலைவர் மண்டேலா இன்று சந்திக்கின்றனர்

(கேப்டவுண்)

தென்ஆபிரிக்க தேசீயத் தலைவர் நெல்சன் மண்டேலா தென்ஆபிரிக்க ஜனாதிபதி கிளார்க்கை அவரின் அழைப்பிற்கிணங்க நாளை சந்திக்க இருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

கறுப்பின மக்கள் நெருக்கமாக குடியிருக்கும் வட்டாரத்தில் அண்மையில் ஏற்பட்ட வன்முறையின் நிலவரத்தை நேரில் பார்வையிட நேட்டால் வந்திருந்தபோது இதனை தெரிவித்தார். இவ் வன்முறையின்போது எண்பது பொதுமக்கள் இறந்துள்ளனர் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்திருக்கின்றனர். இவ் வன்முறைச் சம்பவங்களை நேரில் பார்த்து ஆராய இவர் வந்திருக்கிறார்.

மேலும் தலைவர் மண்டேலா பேசுகையில் ஏப்பிரல் 11 ஆம் திகதி நடைபெற இருந்த ஏஜென்சி தரப்பு பேச்சுவார்த்தைகள் ஒத்திப் போடப்பட வேண்டிய [illegible] பெரிதும் வருத்தப்பட்டதாகவும், தான் தேசிய காங்கிரஸ் சார்பில் பிரதிநிதியாக கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஏஜென்சிக்கும் அரச தரப்புக்கும் இடைப்பட்ட பேச்சுவார்த்தை ஒத்தி போடப்பட்டதை அடுதது மண்டேலா கிளாக்கை சந்திக்க விருப்பம் தெரிவித்தது. ஏஜென்சித் தரப்பு தென்ஆபிரிக்க அரசோடு பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியில் சமரச முயற்சியில் இனமும் ஆர்வம்காட்டி வருகிறது என்பதையே புலப் படுத்துகிறது என்று தென் ஆபிரிக்க அரசியல் அதிகாரி

## லித்வேனியாவிற்கு எச்சரிக்கை

# கிரிக்கெட் ஜாம்பவான்கள் யார்? தீர்மானிப்பது இலகுவானதல்ல

முன்னோடி ஆட்டங்களில் ஒவ்வொரு அணியும்எட்டுபோட்டிகளில் பங்கு கொள்ள வேண்டியிருந்தது. எடுத்த எடுப்பிலேயே இலங்கை பாகிஸ்தானைத் தோற்கடித்தமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். அதன் பின் பாகிஸ் சர்வதேசப் போட்டிகளில் பாகிஸ்தான் தோல்வி கண்டமையையும் குறிப்பிடலாம்.

இரு வருடங்களுக்கு முன் 5 டெஸ்ட்போட்டிகளில் மே இந்தியா அணியிடம்தோல்விகண் இங்கிலாந்து அணி, இம்முறை முதலாவது டெஸ்டிலேயே தைக் கட்டுப்படுத்த இயலவில்லை இங்கிலாந்து இனிங்சில் இயன் பிடிப்பும், வோல்சும் தலா மும்மூன்று விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர்தொடர்ந்து இரண்டாவது இனிங்ஷ்தொடங்கியமே இந்தியஅணிமீண்டும்தளம்பலுக்குள்

நிலைமை வந்ததிற்கு கள் தெரிவிக்கின்றனர்.

(மொஸ்கோ)

லித்வேனிய அரசு சுதந்திரப் பிரகடனத்தைகைவிடாவிடில் கடும் விளைவுகளை எதிர்நோக்கும் என்று சோவியத்யூனியனின் ஜனாதிபதி கொர்ப்பச்சேவ் எச்சரித்துள்ளார்.

இவ்எச்சரிக்கை பற்றி விவாதிபபதற்காக திங்கட்கிழமை லித்வேனியப் பாராளுமன்றம் கூடியது. ஆனால் சுதந்திரப் பிரகடனத்தை கைவிடும் வாய்ப்பு இல்லை என லித்வேனியத் தலைவர் அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டுமானால் லித்வேனியா சுதந்திரப் பிரகடனத்தை ரத்துச் செய்ய வேண்டும் என கொர்பசேவ் கேட்டுள்ளார்.

## கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல் துஷ்பிரயோகம்

(கேகாலை)

கூட்டுறவுச் சங்கங்கள் பொது மக்களுக்கு சரியான முறையில் சிறந்த சேவையாற்ற வேண்டும் என புதிய உணவுக் கூட்டுறவு அமைச்சரான வீரசிங்க மல்லிமராச்சி தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களை வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேணடும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கேகாலையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்க மாநாட்டில் அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சில கூட்டுறவுச் சங்கங்களின் ஊழல் துஷ்பிரயோகம் போன்றவை நடைபெறுவதாக குறிப்பிட்ட அமைச்சர், கூட்டுறவுச்சங்கங்கள் லாபகரமாகச் செயற்பட வேண்டும் எனவும் சொன்னார்.

கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகளை ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இது குறித்து பொது மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்

## அரச வேலை வாய்ப்பில் தமிழர் புறக்கணிப்பு

(கொழும்பு)

புகையிரதப்பகுதியில் பயிலுநராக சேர்வதற்கு கடந்த மாதம் 25-ம் திகதி கொழும்பு இஸிபத்தன வித்தியாலயத்தில் நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் பல தமிழ் இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு சிங்களமொழியிலேயே பரீட்சைகள் நடைபெற்றதால், சிங்களம் தெரியாது எழுதமுடியாது திரும்பினார்கள்.

இவர்கள் தமக்கு மொழி பெயர்ப்பு உடைய வினாத்தாள்களைத் தருமாறு கேட்டபோது அங்குள்ள அதிகாரி ஒருவர் தான ஒன்றுமே செய்ய முடியாது என்று கையை விரித்துவிட்டார்.

இது சம்பந்தமாக பரீட்சை நடாத்திய தேசிய பயிலுநர் சபையிடம் இந்த இளைஞர்கள் புகார செய்துள்ளனர்.

## ஆங்கிலக் கவிதைப் போட்டி

நாடளாவிய ரீதியில் ஆங்கில சிறுகதை, கவிதைப் போட்டிகளை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் 35 வயதிற்குட்பட்ட சகலரும் பங்குபற்றலாம். இப்போட்டி இலங்கையருக்கு மட்டுமே உரியது. கவிதை, சிறுகதை ஆகியவற்றில் எமது தகுதிகாண் குழுவால் தெரிவு செய்யப்படும். முதல் மூன்று ஆக்கங்களுக்கும் முதலாம் பரிசாக ரூபா. 1000/- உம், இரண்டாம் பரிசாக ரூபா. 500/- உம், மூன்றாம் பரிசாக ரூபா. 250/- உம் வழங்கப்படும். (கவிதைக்குத் தனியாக மூன்று பரிசுகளும். சிறுகதைக்குத் தனியாக மூன்று பரிசுகளும் வழங்கப்படும்) அத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசு பெற்ற ஆக்கங்கள் நல்ல முறையில் பிரசுரிக்கப்படும். ஆங்கிலக் கல்வியிலும், ஆங்கில அறிவிலும் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். பரிசுகள் வைபவமொன்றின் பொழுது வழங்கப்படும். இதனைப்பற்றியு அறிவித்தல் பங்குபற்றுபவர்களுக்கு அறிவிக்கப்படும். ஆக்கங்கள் சொந்தமானவையாகவும், முன்பு ஒருபோதும் பிரசுரிக்கப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். புனைபெயரில் எழுதுபவர்களும்கூட தங்களது சொந்த முழுபெயரையும், முழுவிலாசத்தையும் எழுதல் வேண்டும். இப்போட்டி பற்றிய வேறெந்த கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்படக்கூடாது.

ஆக்கங்கள் யதார்த்தமானவையாகவும் ஆக்கபூர்வமானவையாகவும் இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக் கவிதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதிகாண் குழுவின் முடிவே முற்றானது. ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட ஆக்கங்களையும் அனுப்பலாம் கவிதை மரபுக் கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ இருக்கலாம். கவிதை ஒரு பக்கத்திற்கு மேலிருக்கக்கூடாது சிறுகதை மூன்று பக்கங்களுக்குக் கூடுதலாக இருத்தலாகாது. ஆக்கங்கள் அனைத்தும் தட்டச்சு அடித்ததாக அனுப்பப்படல் வேண்டும் அச்சடிக்குப் போது (Double Spacing) இருக்க வேண்டும். ஆக்கங்கள் ஒரு பக்கத்தில் மட்டுமே தட்டச்சிடப்பட்டிருக்கவேண்டும். ஆக்கங்களை அனுப்புபவர்கள் தங்கள் முழுப்பெயரையும் விலாசத்தையும் பிறந்த திகதியையும் குறிப்பிடல் வேண்டும். ஆக்கங்கள் 30-4-1990 அன்றோ அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:-

Jaffna English Academy
9, Rakka Lane, Chundikuli,
Jaffna.

## வடக்கு மரக்கறி தெற்குச் சந்தைகளில்

(மிகிந்தலை)

யாழ்ப்பாணத்தில் விளைவிக்கப்படும் மரக்கறி வகைகளான பீற்றூட், கரட், லீக்ஸ் ஆகியன தம்புள்ள, மிகிந்தலைச் சந்தைகளில் சமீப காலங்களாக மலிவு விலையில் விற்பனையாகின்றனவாம். நுவரெலியாவில் இருந்து கொண்டுவந்து விற்கப்படும் மரக்கறியை விட யாழ்ப்பாண மரக்கறிகளின் விலை சந்தைகளில் குறைவாகக் காணப்படுகின்றன.

தான் அவுஸ்ரேலிய ஆட்டங்கள் பாகிஸ்தானுக்குப் பாதகமாகவே அமைந்தன. இருந்தும் இறுதி இரண்டு முன்னோடிப் போட்டிகளிலும் பாகிஸ்தான் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றது. இந்நிலையில் அபாரமாக ஆடிக்கொண்டிருந்த சயீட் அன்வர், ரமீஸ்ராஜா இருவரும் அவுஸ்ரேலியாவுக்கு பெரும் சவாலாகக் காணப்பட்டனர். அது மட்டுமன்றி ஓட்ட விகிதத்திலும் அவுஸ்ரேலியாவை விட பாகிஸ்தான் 4 53 பெற்று முன்னணியில் நின்றது. எனவே இறுதி ஆட்டங்கள் மூன்றும் பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டன. இருந்தும் அவுஸ்திரேலியா முதல் இரண்டு போட்டிகளிலும் சுலபமாகவே பாகிஸ்தானைத் தோற்கடித்து சாம்பியன் கிண்ணத்தைத்தட்டிச் சென்றது.

முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் 47 5 ஓவர்களில் 162 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. இதற்குப் பதிலாக 3 விக்கெட் இழப்பிற்கு அவுஸ்திரேலியா குறிப்பிட்ட ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. வாசிம் அக்ரம் இவ்வாட்டத்தில் அபாரமாக ஆடி 86 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து நடைபெற்ற 2வது ஆட்டத்திலும் அவுஸ்திரேலியாவின் 255 ஓட்டங்களுக்குப் பதிலாக 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து

கடந்த மாதத்தில் நடைபெற்ற சில நிகழ்வுகள் கிரிக்கெட் ரசிகர்களை ஆச்சரியத்துக்குள்ளாயிருக்கும் இவ்வகையில்இங்கிலாந்து மேற்குஇந்திய அணியை முதலாவது டெஸ்ட் மாட்சில் கரிபியன் தீவுகளிலேயே தோற்கடித்தமையும், நியூசீலாந்து ஆடப்பட்ட ஒரேயொரு டெஸ்ட் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தமையும்பென்சன் அன்ட் ஹெஜஸ் ஒருநாள்

பெற்ற வெற்றி மகத்தானதாகக் கருதப் படுகின்றது. 1974 இல் டிரினாட்டில் மே. இந்திய அணியைத் தோற்கடித்த இங்கிலாந்து மிக நீண்ட காலத்தின் பின் -16 வருடங்கள்- ஜமெக்காவில் உள்ள சபீனா பாக் மைதானத்தில் மீண்டும் ஒரு வெற்றியைச் சந்தித்துள்ளது. கப்டன் விவியன்ரிச்சர்ட்ஸ் 1977ன் பின்தன் தாயகப் பிரதேசமான கரிபியனில் தோல்வியைச் சந்தித்ததும் இவே முதல் தடவையாகும். 1983இல் நடைபெற்ற உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியா மே. இந்தியா அணியைத் தோல்வியுறச்

### நிர்மலன்

செய்த நிகழ்ச்சியின்பின்கிரிக்கெட் உலகில் இது பெரிய அதிர்வைத் தந்திருக்கிறது

முதலில்துடுப்பெடுத்தாடிய மே. இந்தியா அணி 164ஓட்டங்களையே பெற முடிந்தது. குறிப்பிடத்தக்கதாக யாரும் துடுப் பெடுத்தாடவில்லை. இதற்குக் காரணம் இங்கிலாந்து வீரர்களின் அபார பந்து வீச்சேயாகும். அங்குஸ் பிரேசர் சிறப்பாகப் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். ஏனைய பந்து வீச்சாளர்களும் மிகச்சிறப்பாகப பந்து வீசினார்கள். பந்துவீச்சுத்திறமை மே.இந்திய புகழ் பெற்றஆட்டக்கரார்களைக் கட்டிப்போட்டதுடன் தங்கி நிற்கவும் விடவில்லையென்பதேஉண்மையாகும். இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சிறப்பாக ஆடி 364 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டது. அலன்லாம்ப் பெற்ற 132 ஓட்டங்களும் றொபின் ஸ்மித் பெற்ற 57 ஓட்டங்களும் குறிப்பிடத் தக்கவை. உலகப்புகழ்பெற்றமே. இந்திய வேகப் பந்து வீச்சாளர்களால் இவர்களது வேகத்

ளாக்கிய 240 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மே இந்திய அணியை நிர்மூலமாக்கியவர்கள் இருகறுப்பினத்தவர் ஒருவர் டெவன் மல்லகம் மற்றையவர் கிளாட்ஸ்டன்ஸ் மோல். இருவரும் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இந்த நிலையில் இங்கிலாந்துக்கு வெற்றி வாய்ப்யில் எவ்வித சந்தமும் இருக்க வில்லை. ஒரேயொரு விக்கெட்டை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றதும் இங்கிலாந்து மே. இந்திய அணியை 9 விக்கெட்டுக்களால் தோற்கடித்துவெற்றிகண்டது. அதுவும்4 டெஸ்ட்களில் வெற்றி கண்டது குறிப்பிடத் தக்கதாகும்

அவுஸ்திரேலியா வெற்றிகரமாக பாகிஸ்தான் அணியை டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களில் வெற்றி கண்டபின் நியூசீலந்துக்குப் பயணமாகியது. அங்கு நியூசீலந்துக்கு எதிராக ஆடப்பட்ட ஒரேயொரு டெஸ்டில் அவுஸ்திரேலியா மண்கெளவியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி எதிர்பாராத வகையில் 110 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. றிச்சட் ஹட்லி விளையாடும் அணியென்று என்ன செய்யும் என்பதற்கு இது நல்லதொரு பதிலாகும்,

ஒரே மட்சில் 5 விக்கெட் எடுத்தல் என்பதில் இம்மாட்சில் ஹட்லி சென்சுரி போட்டுள்ளார். ஆம் 100 ஆவது முறையாக 5 விக்கெட் வீதம் எடுத்துள்ளார்.

இவருடன் இணைந்து டணி மொரிசன் சிறப்பாகப் பந்து வீசி 3 விக்கெட்டுக்களைத் தட்டிக்கொண்டார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசீலந்து அணியை 202 ஓட்டங்களுக்கு அவுஸ்திரேலியா அவுட்டாக்கியது. முதல் இன்னிங்சில் இரண்டு அணிக்கும்

(6ஆம் பக்கம் பார்க்க)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



## மகாலிங்கம் காண்டீபன்
(மேஜர் காண்டீபன்)

மண்ணில் முத்தானது 14 - 06 - 1970

விண்ணில் சொத்தானது 07 - 03 - 1990

இறந்தும் இறவாது நம்
இதயத்தில் உறைந்திருக்கும் செல்வமே காண்டீபா,
பிறந்தாய்
தமிழ் மண்ணின் முத்தானாய்
வளர்ந்தாய்
தமிழ் ஈழம் வென்றெடுக்கச் சிறந்தாய்
வேங்கையானாய்-
சங்கையாய் உன்செயலை முடித்து நின்றாய்
மைனராய் இருந்தாய் அன்று
மேஜராய் முடி சூடி விண்ணிலே சொத்தானாய் இன்று
காண்டீ! எம் உயிரே!
உன் கனவு பலிக்குமென்று
உள்ளமெல்லாம் உனை வாழ்த்தும்
உரையெல்லாம் வானிருந்து
உவகையாய் கேட்டிடுவாய்

அமரர் மகாலிங்கம் காண்டீபனின் நீங்காத நினைவாக, சின்னமாக முதல் நாள் 05- 04- 1990 இல் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மறுநாள் 06- 04- 1990 இல் கண்டாவளையில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்
சகோதர சகோதரிகள்
மைத்துனன்
மருமகன் (B/565)

---

அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி!

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
உற்பத்தி செய்வோர்

✻

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

✻

## முருகன் ஆபரண மஹால்

தங்கப் பவுண் நகை உற்பத்தியாளர்கள்
38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

R.62

---

# லொறி அடிச்சட்ட விற்பனை

சங்கத்திற்குச் சொந்தமான 26/299 இலக்க டாட்டா பென்ஸ் அடிச்சட்டம் கேள்விப்பத்திரங்கள் கோரி விற்பனை செய்யப்படவுள்ளது. அடிச்சட்டத்தைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 500/ செலுத்துவதுடன் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 10/- செலுத்தி சங்கத்தால் விநியோகிக்கப்படும் படிவத்தில் 18-04-90 க்கு முன்பாக தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அரக்கு மெழுகிட்ட உறையின் இடதுபக்க மேல்மூலையில் 26/299 இலக்க லொறிக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கூடுதலான கேள்விக்காரருக்கே முன்னுரிமை அளிக்கப்படும். லொறியினைப் பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரத்தில் வந்து பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்களை ஏற்கும் நிராகரிக்கும் உரிமை சங்கத்தின் இயக்குனர்சபைக்கு உண்டு.

பொதுமுகாமையாளர்,
கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு. (B/573)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெறுதல்.**

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வீடொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தேவைப்படுகின்றது. குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. பல்கலைக் கழகத்தில் திருநெல்வேலி வளாகத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. தளப்பரப்பு 150 சதுர மீற்றர்களுக்கு குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்குமிடவசதி, பூந்தோட்ட இடவசதி என்பனவற்றை உடையனவாய் இருத்தல் வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின் போது சிறிய திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990. 04. 20 ஆம் திகதிக்கு முன்னர் நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வீட்டைக் குத்தகைக்கு விடல்'' என எழுதப்படல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை
03- 04- 1990 (B/571)

---

## ஏப்ரல்பூல் சேஷ்டை கைகலப்பில் முடிவு

(கரவெட்டி)

ஏப்ரல்பூல்தினமானஞாயிற்றுக்கிழமைபருத்தித்துறையில் வீதியால் செல்வோருக்கு மை, முட்டை என்பவற்றைச் சிலர் வீசி சேஷ்டைகள் புரிந்தனர்.

ஒரு ஆசிரியருக்கு இவ்வாறு நடைபெறும்போது அது வாக்குவாதமாக மாறி கைகலப்பில் முடிந்தது.

இதனையடுத்து அங்கு வந்த சிலர் இவர்களைச் சமாதானப் படுத்தி மேலும் சேஷ்டைகள் நடைபெறாது தடுத்தனர்.

## அன்னை பூபதியின் நினைவுக் கூட்டம்

(வண்ணார்பண்ணை)

அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவு எழுச்சிக் கூட்டம் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் தலைவர் ம. ஆனந்தராசா தலைமையில் நேற்று செவ்வாய் கிழமை நடைபெற்றது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். (45)

## பத்திரிகையாளருக்கு இலவச பிரயாணச் சீட்டு

(கொழும்பு)

பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகை நிருபர்களுக்கும் இலவச பிரயாணச் சீட்டுக்களை வழங்குமாறு போக்குவரத்து அமைச்சரைக் கேட்கும் தீர்மானம் ஒன்றை தெகிவளை கல்கிசை மாநகரசபை நிறைவேற்றியுள்ளது.

இதேவேளை பத்திரிகையாளருக்கென காப்புறுதித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும்படி நிதி மந்திரியை மேற்படி மாநகரசபை கேட்டுள்ளது.

---

**இலங்கை வாழ் தமிழ் மக்களின் நலனுக்காக உயிர்த் தியாகம்செய்த**

**அன்னை பூபதியின் நினைவாக நாம் உயிர் உள்ளவரை நினைவு கூருகின்றோம்!**

அவளது நாமம்
ஆமாம்
அதனை நாம் உதட்டிலே எடுக்க வேண்டாம்
ஏனெனில்
அவள் எம் இதயக் கோவில்களில்
தெய்வமாய் அமைந்துவிட்டாள்
அவளைப் பற்றி நானிலம் அறியும்
அவளைப் பற்றியே
இந்த மண்ணில் உள்ளவர்கள் பேசிக்கொள்கின்றார்கள்.

அவள்
எப்படி தன்னை இழந்தாள் --? அவள்
எப்படி தம் பிள்ளைகளின்
உணர்வை தட்டி எழுப்பிவிட
படிப்படியாக தன் உணர்வை இழந்தால்....?
அவள் கண்கள் -
எப்படி தம் மக்களின் விடிவிற்காய்
ஒளியின் சாயலை இழந்தே போயின......?
அவளது சிவந்தஉதடுகள்
எப்படி வெடித்து இரத்தம் இழந்து
காய்ந்து போனது.....?
உடலைச் சுருக்கி - குடலைச் சுருக்கிய
அந்த முதுமைப் பருவம்
எப்படி தனது காய்ந்த உதட்டிலே
ஒளிப் புன்னகையை ஆக்கிக் கொண்டது.....?
இவற்றைப் பற்றி எதுவும் கேளாதீர்!
இவையெல்லாம் -
சரித்திரங்காணாச் சரித்திரங்களாய்
வரலாற்றேட்டில் பதிந்துவிட்டன.



தீவுப் பகுதி மக்கள் சார்பில்

# லலிதா ஜுவல்லறி ஸ்தாபனத்தார்

## 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(R 65)

யாழ். உதைபந்தாட்ட லீக்

# 13 வயதுக்குட்பட்டவர்களுக்கு நொக்கவுட் போட்டிகள்

(யாழ் விளையாட்டு நிருபர்)

''யாழ். உதைபந்தாட்ட லீக்'' விளையாட்டுக் கழகங்களுக்கிடையே 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

மேற்படி போட்டியில் மொத்தம் ஆறு விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

6 ஆம் திகதி முதல் போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் மோதும். இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என உதைபந்தாட்ட ரசிகர்சள் கருதுகிறார்கள்.

2 ஆவது போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

7 ஆம் திகதி நடைபெறும் போட்டிகளில் முதல் நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுடன் சென். அன்ரனிஸ் கழக ''எ'' பிரிவுக் கோஷ்டியும் குருநகர் யுத் கார்மல் கழகமும் மோதும்.

---

ஊர்காவற்றுறை தெ. ப. பொ. கூ. வி. சங்கம்

அன்னை பூபதியின்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தியாகத்தின் சுடரே! திகட்டாத தமிழ்த்தாயே!
வீரத்தின் விடிவிளக்கே! வெற்றியின் தலைமகளே!
விடுதலை வேட்கையிலே, களம் கண்ட கன்னித்தமிழே!
காவியத்தின் தலைவியானாய், கலங்கரை விளக்கானாய்!

பூபதி அம்மையாரே, புரட்சியின் பிறப்பிடமே!
பெண்ணினத்தின் போற்றற்கரிய பொக்கிசமே!
எழுச்சியின் எழுதுகோலே, எம்மினத்தின் திறவுகோலே!
எண்ணமெல்லாம் நிறைந்தவளே, மண்ணுக்காய் மரித்தவளே!

தமிழ்மண்ணின் தன்மானம் காத்த தலைவியே!
தன்னலம் கருதாத தனித்துவம் காத்த மங்கையே!
இன்னுயிரை ஈந்து, இனத்துக்கோர் விடிவு கண்டாய்!
இதயத்தில் கோவிலானாய், இழப்பிலே தீபமானாய்!

விடிவுகாண விரைந்திட்ட வீரத்தாயே!
விலையில்லா உன்னுயிரை விடுதலைக்கு அர்ப்பணித்தாய்!
விடுதலைப் புலிகளின் வீரத்திற்குத் திலகமிட்டாய்
வெஞ்சினம் கொண்டு விரைந்திட்டார் உன்மக்கள்.

தியாகத்தின் திருஉருவே! வீரத்தின் விடிவிளக்கே
திக்கெட்டும் உன்தியாக வரலாறு முக்கியம் பெறுமம்மா!
அடுப்பங்கரைப் பொம்மையாய், அடங்கி வாழ்ந்த அரிவையரை
அறைகூவி அழைத்தாய், அடிமை விலங்குடைத்தாய்.

தமிழரின் தலைகுனிவு தமிழன்னை தாங்காமல்
தானாகக் களத்தில் குதித்தாள், தமிழ்மானம் காத்தாள்
உயிருள்ளவரை உயிருக்காகப் போராடி
உண்ணாவிரதமெனும் பொன்னாபரணம் புனைந்தாள்.

ஊனின்றி உறக்கமின்றி உணர்விழந்தும்
உணர்ச்சியின்றி உள்ளுணர்வு இழந்தபோதும்
தனிநாடு காணத் தணியாத தாகம் கொண்டு
தன்வழி தளர்ந்திடாமல், குன்றா உறுதியுடன் குலம் காத்தாள்

நிபந்தனையற்ற போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை - உன்
நிபந்தனையாக வைத்து, உண்ணாவிரதத்தின் உயிர்மூச்சானாய்!
போராட்டத்தின் வடிவத்துக்கு புதியதோர் திருப்பமானாய்
போராளிகளின் இதயத்தில் இணையில்லாச் சக்தியானாய்.

அன்னையின் இழப்பில் அமைதியை இழந்தோம்

---

### தீவுப்பகுதி எங்கும் சிற்றூரவை அமைப்பு

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் இயக்கமாகிய மக்கள் முன்னணியினரால் தீவுப்பகுதிகளில் சிற்றூரவை என்னும் அரசியல் கிளைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகள் தோறும் இந்த சிற்றூரவை அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சிற்றூரவையில் இருபது அவ்வூர்வட்டார மக்கள் அங்கம் வகிக்கிறார்கள். இவ்வமைப்புக் கூட்டங்களை விடுதலைப்புலிகளின் தீவக அரசியற் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ நடாத்தி வருகின்றார். (15)

---

### அரியாலையில் விளையாட்டுப் போட்டிகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

71 ஆவது தேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு அரியாலையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளின் 7 வீரர்கள் அடங்கிய உதை பந்தாட்ட அரை இறுதி போட்டியில் பாசையூர் சென். அந்தனீஸ் விளயாட்டுக் கழகம் 5-2 கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இப்போட்டி அரியாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் போட்டி ஆரம்பமாகியதும் முதல் கோலை போட்டது. அரியாலை அணி சிறிது நேரத்தில் ஒருகோலைப் போட்டுள்ளது. சென் அந்தனீஸ் மிகவும் சிறப்பாக விளையாடி மேலும் 4 கோல்களைப் போட்டனர். அரியாலை மேலும் ஒரு கோலை போடும் வாய்ப்பு எட்டியுள்ளது.

இப்போட்டியில் அல்பிரட்ரட்

---


# Patrician Institutes

## தொழினுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**I. COMPUTER PROCESSING COURSES**

PATRICIAN INSTITUTES AND BUSINESS PROMOTORS (PVT) LTD.)- JOINT VENTURE

(i) COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE AND DISK OPERATING SYSTEM.
DURATION - 3 MONTHS
COMMENCING - 16.04.1990.

(ii) WORD PROCESSING
DURATION - 3 MONTHS
COMMENCING - 16.04.1990

(iii) LOTUS 123 / SPREAD SHEET ANALYSIS.
DURATION - 3 MONTHS
COMMENCING - 16.04.1990

Lecturers- MR S. R. LOGENDRA D. C. A (SYSTEMS ANALYST)
MISS. M. VARATHARAJAH Management Accountant
AND Passed Finalist C. I. M. A. (Lon)
MR R. N. VARENDRAN A. C. A.

EQUIPMENT USED - LASER X7/2, X7/3, 386 (I B M Compatibles) AND APPLE (II) COMPUTER

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 16.04 1990 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

**2. SHORT - HAND AND TYPING**
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (6 மாதகால பயிற்சி)

**3. ELECTRICAL WIRING**
மின்சார இணைப்பு (3 மாதகால பயிற்சி)

**4. MOTOR MECHANISM**
மோட்டார் மெக்கானிசம் (6 மாதகால பயிற்சி)

**5. MOTOR WINDING**
மோட்டார் வைன்டிங் (4 மாதகால பயிற்சி)

**6. LATHE OPERATION**
கடைச்சல் இயந்திர இயக்கம் (3 மாதகால பயிற்சி)

**7. ARC WELDING**
மின் ஒட்டு வேலை (3 மாதகால பயிற்சி)

**8. MECHANISED WOOD WORK**
இயந்திர மரவேலைப் பயிற்சி (2 1/2 மாதகால பயிற்சி)

**9. MASONARY**
கட்டுவேலைப் பயிற்சி (2 1/2 மாதகால பயிற்சி)

மேற்படி மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள் தேசிய நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிலையத்தின் (ICTAD) தொடர்புடன் அகில உலக கெயார் நிறுவனத்தால் (CARE INTERNATIONAL) நடாத்தப்படவிருக்கிறது.

தகைமைகள்:- 15 வயதிற்கு மேற்பட்ட 8ஆம் வகுப்பும், அதற்கு மேலும் படித்தவர்கள்

பயிற்சி ஆரம்பம்:- 02 வைகாசி 1990.

கொடுப்பனவு:- பயிற்சிக்காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதாந்தம் 600/- ஊக்குவிப்பு பணம் வழங்கப்படும் வெளியிடங்களில் இருந்து வருவோருக்கு உணவு, தங்கல் வசதிகள் செய்து கொடுக்கப்படும். அத்துடன் பயிற்சி பெறுவோருக்கு முடிவில் சொந்தமாக வைத்திருக்க இலவச உபகரணப் பொதி வழங்கப்படும்.

பயிலுனர் வேலையாளர் பயிற்சி:- ஆரம்ப பயிற்சியை தொடர்ந்து 10 மாதங்களுக்கு வேலைத்தளங்களில் பயிலுனர் வேலையாளர் (APPRENTICE) பயிற்சி நடைபெறும் இக்காலப்பகுதியில் பொருத்தமான சம்பளம் வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். அத்து

அன்னையின் இழப்பில் அமைதியை இழந்தோம்
அம்மா! உன்நினைவு அழியாத கோலமம்மா!
உன்தியாகத்தின் திருஉருவம் எம் வலிமைக்கோர் வரப்பிரசாதமம்மா
உன் உறுதியின் துணிவால் எம் விடுதலைக்கு உரம் இட்டாய்.

நீங்காத நினைவில் நின்று. உன்நினைவு
நிழலாக எம்மீது தொடருமம்மா!
தாங்காது எம்முள்ளம் உன்பிரிவால்
தூங்காது எம்கண்கள் இனிமேலும்.

புலிகளின் அன்னையே, பூபதி அம்மையாரே!
புலிகளின் தாகத்துக்குப் புத்துயிர் அளித்தவளே!
இதய ஒலியில் இணைந்திட்ட எம் அன்னையே
இணையில்லா உன்தியாகம் காலத்தால் கரையாதம்மா.

விறல் மங்கை மண்ணிலே சங்கமத்தில்
வீரத்திலகமிட்டு சென்றுவா மகனே என்றாய்
விதைத்திட்ட விதைகளோ விடுதலை வேட்கையில்
வெஞ்சினம் கொண்டு விரைந்திட்டார் விடிவு நோக்கி.

புரட்சித் தலைவியே பூகம்பம் வெடித்தது
புரட்சி மலர்கள் பூமியில் மலர்ந்தன
விடுதலை வேங்கையின் விறல் காண
விரைந்திடுவாய் எம்மிடத்தில்.

**அன்னை பூபதியின் கனவுகள் நனவாக அன்னையின் ஆத்ம சாந்திக்காக அளிக்கின்றோம் அஞ்சலிக் கவிதை.**

**தீவுப்பகுதி மக்கள் சார்பாக**
**தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம்,**
**ஊர்காவற்றுறை.** (R/58)

இப்போட்டியில் அல்பிரட்ரட்ணராஜா, ரவிக்குமார் ஆகிய இரு வீரர்களும் சிறப்பாக ஆடி உதைபந்தாட்ட ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றனர்.

மத்தியஸ்தராக திரு. எம். கே. விமலதாசன் கடமை புரிந்தார். (42)

## பண்ணை வீதி பல லட்சம் ரூபா செலவில் திருத்தம்

(தீவுப்பகுதி)

தீவுப் பகுதியின் முக்கிய நுழைவாயில் வீதியாகிய ஊர்காவற்றுறை, பண்ணை வீதி பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை காலமும் கடலரிப்பினால் சிதைந்திருந்த இவ்வீதியின் இருமருங்கும் கொங்கிறீட் போடப்பட்டுச் செப்பனிடப்பட்டு வருகிறது. கடந்த கால அசம்பாவித சம்பவங்களினால் சேதமடைந்த இவ்வீதியிலுள்ள பால வேலைகளும் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வீதியைத் திருத்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் அரசினர் தொழினுட்ப கல்லூரி தொழில் சான்றிதழ் பரீட்சைக்கும் தோற்றி அச்சான்றிதழையும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர் நடவடிக்கை:- பயிற்சியின் பின் பயிற்சி பெற்றோருக்கு தனியாகவோ, கூட்டாகவோ தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க அகில உலக கெயார் நிறுவனத்தால் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி **12.04.1990**

விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விபரங்கட்கு
REGISTRAR

**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES**
59, St. PATRICKS ROAD,
JAFFNA.

## வாகன லைசென்ஸ் புதுப்பித்தலுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள்

*FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE - 1990*

1990ஆம் ஆண்டுக்கான மோட்டார்வாகன லைசென்ஸ் புதுப்பித்தலுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் திரு. A. S. குணசீலன் (Automobile Engineer) அவர்களால் தொடர்ந்து எமது தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

REGISTRAR
**Patrician Industrial Institute**
59, St. PATRICKIS ROAD, JAFFNA. (B/552)

**முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு புகழ்பெற்ற ஸ்தாபனம்**

# ராசி சில்க்ஸ்

3ஆவது வருட ஆரம்பத்தில் காலடி எடுத்து வைக்கும் இந்நன்நாளில் எமது ஸ்தாபனத்திற்கு அன்பும் ஆதரவும் நல்கிய அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உறவி ்கள் யாவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியையும், புத்தாண்டு வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**70, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

**ராசி சில்க்ஸ்** உரிமையாளரும், ஊழியர்களும் (B/ 564)

# ரெலி கோணர்

கச்சாய் வீதி, கொடிகாமம்.

வீடியோ கசட்
**T V**
றேடியோ
எவர்சில்வர் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
**விற்பனை செய்பவர்கள்**

வீடியோ படம் பிடிப்பதற்கும், அன்ரனா பொருத்தவும், வீடியோ டெக் வாடகைக்குப் பெறவும் மற்றும் **T V** வீடியோ டெக், றேடியோ, மின் உபகரணங்கள் பழுதுபார்த்துக் கொள்ளவும் சிறந்த ஸ்தாபனம்

**TELE CORNER**
***Kachchai Rd, Kodikamam.***

(B515)


## கிரிக்கெட்..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்த எண்ணிக்கையைப் பெற்றமை, இவ்வாட்டம் ஒரு முடிவைக் காட்டும் என்பதை கோடி காட்டியது. இரண்டாவது இனிங்சை அவுஸ்திரேலியா ஆரம்பித்தபோது, ஏறத்தாள 350-400 அளவில் எண்ணிக்கையைப் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது இருந்தும் அலன் போடர்(78) தவிர ஏனையவர்கள் குறிப்பிடத்தக்க முறையில் ஆடவில்லை. இங்கு சுழல் பந்து வீச்சாளர் பிரேஸ்வெல் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டார்.

அடுத்த 2ஆவது இனிங்சை ஆரம்பித்த நியூசீலந்து வெற்றிவாய்ப்புக்கு 178 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது. ஆட்டத்தை ஆரம்பித்த நியூசீலந்துக்கு இத்தொகை இலகுவாக இருந்திராது அணியின் கப்டன் ஜோண் ரைட் இல்லாதிருந்தால் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரானஜோண் ரைட் மிகச் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 117 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஆக 1 விக்கெட் இழப்பிற்கு வெற்றிகாணத் தேவையான ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் நியூசீலந்து அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தது. றிச்சட் ஹாட்லி, பிரேஸ்வெல், ஜோன்றைட் ஆகியோர் நியூசீலந்து அணியின் இவ்வரிய வெற்றிக்குக் காரணகர்த்தாக்கள் ஆவார் இத்தோல்வியைச் சீரணித்துக்கொள்ள அலன்போடர் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார் என்று மட்டும் துணிந்து கூறலாம்.

1989இல் சார்ஜாவில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ட்ரொபி ஒரு நாள் கிரிக்சட்டில் வெற்றி பெற்று, அப்படியே இந்தியா வந்து நேருகப் ஒரு நாள் ஆட்டங்களில் மே இந்திய அணியை அற்புதமாகத் தோற்கடித்து சம்பியன் பட்டம் பெற்று ,பின்னர் பாகிஸ்தானில் இந்திய அணியை ஒரு நாள் போட்டிகளில் தோற்கடித்து சாம்பியனாகி ஒரு மிகச் சிறந்த உலக சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் அணி என்ற பெருமையுடன் பென்சன் அன்ட்ஹெட்ஜஸ் உலகவரிசை ஒருநாள் ஆட்டத்தொடரில் பங்கு கொள்ள பாகிஸ்தான் அவுஸ்திரேலியா சென்றது அவுஸ்திரேலியா இலங்கை உள்ளிட்ட முத்தரப்புப் போட்டிகளில் பாகிஸ்தான் போட்டியிட வேண்டியிருந்தது.

186 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. எவ்வகையில் பார்த்தாலும் பாகிஸ்தானுக்கு இவ்விரு ஆட்டங்களும் படுதோல்வியென்றே கூறவேண்டும். ஒரு சிலரே குறிப்பிடத்தக்க ஓட்டங்களைப் பெற்றனர். இம்ரான் கான் இரு ஆட்டங்களிலும் ஒவ்வொரு ஓட்டமே பெற்றார். பல வெற்றிக் கிண்ணங்களுடன் அவுஸ்திரேலியா சென்ற பாகிஸ்தான் அங்கு தன் சிறப்பை அவுஸ்திரேலியாவிடம் பற்றி கொடுக்கது. இருந்தும் சர்வதேச கிரிக்கெட் ஆட்டக்காரராக இம்ரான் தெரிவு செய்யப்பட்டதும், மான் ஒப் த சீரிஸாக அக்ரம் தெரிவுசெய்யப்பட்டமையும் பாகிஸ்தானுக்கு ஆறுதல் தருவதாகும்.

நிர்மலன்


## மருதடி விநாயகர் உற்சவத்தில் இலங்கை வங்கி கருமபீடம்

மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தையொட்டி நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்ட மேற்படி கருமபீடத்தை 4-04-1990 புதன் கிழமை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் திரு. கே. இராஜசுந்தரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

**மாவட்ட முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**யாழ்ப்பாண மாவட்டம்.** (B/574)



## தியாக தீபம் அன்னை பூபதிக்கு

எமது இதய அஞ்சலிகள்

# தெய்வேந்திரா தியேட்டர்

சாவகச்சேரி. (R/69)


## ஊற்றுப்புலம்

# கதிரவேலு வித்தியாலயம் திறந்துவைக்கப்பட்டது

எமது போராளிகளின் தியாகத்தின் விளைவாகவே இன்று இத்தகைய பலன்களை நாம் எட்டிப்பார்க்கிறோம். சுதந்திரத்தின் எதிர்காலத்தை எட்டிப்பார்க்கும் நாம் இனிமேலாவது உறுதியுடன் இருந்து முன்னேற்றம் காண முயற்சிக்க வேண்டும். அதற்கு கல்வியே பிரதான மூலமாக அமைய வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி ஊற்றுப்புலம் கதிரவேலு அரசினர் தமிழ் வித்தியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கூறினார்.

உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. பத்மநாதன் தலைமையில் திட்ட ஒருங்கிணைப்பாளர்திரு நா.வை.நகுகராசா வரவேற்புரையுடன் நடைபெற்ற இவ்விழாவில் குடியேற்றத்திட்ட மக்களின் வேண்டுகோளின்பெயரில்அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக் கொடியை ஏற்றி வைத்தார்.

இவ்வைபவத்தில் 1983 வன்செயல்களில் பாதிக்கப்பட்ட மக்களை ஊற்றுப்புலத்தில் குடியேற்றி வைத்த அகதிகள் புனர்வாழ்வு நிறுவன முன்னாள் தலைவர் அமரர் விசுவலிங்கம் ஐயா குருகுலம் அப்புஜி அமரர் கதிரவேலு விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஜெயக்கொடி மற்றும் போராளிகளை நினைவு கூர்ந்து பலரும் உரையாற்றினர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர்திரு. க. மாணிக்கவாசகர் உட்பட பலர் இங்கு உரையாற்றினர். கொத்தணி அதிபர் திரு. கனகசபாரத்தினம் தனது ஒரு மாதச் சம்பளத்தை இப்பாடசாலை தளபாடத்துக்கு வழங்கினார். பாதிக்கப்பட்டோருக்கான உடுபுடவைகளும் வழங்கப்பட்டன.


சரித்திரத்தில் சங்கமமாகிய

## அன்னை பூபதிக்கு

எங்கள்

# கண்ணீர் அஞ்சலிகள்



அந்நியப் படைகளின் அடக்கு முறைகளை
அகிம்சை வழியில் அகற்றிய தலைவி
செந்நிறப் பிழம்பை செங்கதிர் வீசியும்
செந்தமிழகம் சிவப்பது முறையோ?
உன்னரும் தியாகம் எம் உள்ளத்தில் மட்டுமோ
உலகில் பலமாய் உறைந்தேவிட்டது
அண்ணல் காந்தியை விஞ்சிய தலைவி - தமிழ்
அன்னையர் திலகம் ஆகியே விட்டாய்!
உறங்கிய உள்ளங்கள் உணர்ச்சியே பொங்க
அறம்வழி ஊட்டிய அம்மையும் நீயன்றோ!
சாதனை படைத்த சரித்திர நாயகியே
ஆதவன் போன்ற அம்மையே வாழி!

**விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்**
**வடமராட்சி.** (B/ 66)



## சிவில் பொறியியலாளர் , தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் விண்ணப்பம் கோரல்

வீதி வேலைகள், கட்டிட வேலைகளில் போதிய தகைமையும், அனுபவமும் உள்ள சிவில் பொறியியலாளர் ஒருவரதும், தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவரதும் சேவைகளை மேற்குறிப்பிட்ட இரு துறைகளில் ஒப்பந்த வேலைகளில் உடனடியாக ஈடுபட உள்ள தாபனம் கோருகிறது. வேதனம் பேசி நிர்ணயிக்கலாம்.



## மக்கள் வங்கி அடைவு மீளளித்தல் முல்லைத்தீவு மாவட்டம்

# திருத்தம்

ஏற்கனவே அறிவித்ததன்படி 6 12 83 வரை முல்லைத்தீவுக் கிளையில் அடைவு வைத்து அவற்றை மீளப்பெறுவதற்காக 21.9.89 வரை பணம் செலுத்தியவர்கள நகைகளை பின்வரும் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பி. ப. 1.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்,

| வழங்கும் திகதி | கிழமை |
|---|---|
| 04-04-90 | [illegible] |



## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி!

மாணவ மணிகளுக்கு அச்சமற்ற அமைதியான சூழ்நிலையில்வரும் இனிய தமிழ்ப் புத்தாண்டில் ஓர் நற்செய்தி!

இலவச சலுகை அடிப்படையில்

# கொம்பியூட்டர் கல்வி

ஆர்வமுள்ளவர்கள் 09-04-1990 ஆம் திகதிக்கோ
அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக கீழ்வரும்மு
கவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படு
கின்றனர். இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இலக்கம் **005**
மே/பா, ஈழநாதம்
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
(B/566)

05-04-90 வியாழக்கிழமை
06-04-90 வெள்ளிக்கிழமை

வழங்கும் நிலையம்
மாங்குளம் பொலிஸ் நிலையம்

தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்கும் ஸ்தாபனத்திற்கு ஏற்பட்ட மாறுதலுக்கு வருந்துகிறோம்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி
வடபிராந்தியம்
(B/572)

சாப்பிட்ட தீன்கூடச் செரிக்கவில்லை - தமிழ்ச்
சந்ததியோ பல நாளாய்ச் சிரிக்கவில்லை - இதற்காகவோ
தாயே நீ நோன்பு இருந்தாய்



## "நியூ சிற்றி பார்மசி"

28, டாக்டர் சுப்பிரமணியம் வீதி.
சுன்னாகம்.
(R/61)

## மகளிர் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி

(யாழ்.விளையாட்டு நிருபர்)

நூற் படிப்பும் விளையாட்டும் மாணவர்களின் இரண்டு கண்கள் போன்றது. அவர்கள் கல்வி வளர்ச்சியோடு விளையாட்டுத்துறை வளர்ச்சியையும் சேர்த்து முன்னேற வேண்டும்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திருமதி எஸ் கல்யாணசுந்தரேசன் இல்வாறு கூறினார்.

விழாவிற்குப் பிரதம விருந்தினர்களாக கல்வி அதிகாரி திரு. ஏ. தங்கராசா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரி திரு. கே நாகமணியும் கணக்காளர் திரு. என். ஜெபரஞ்சிதனும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் கங்கா இல்லம் முதலாம் இடத்தையும் யமுனா இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன

திருமதி என். தங்கராசா பரிசில்களை வழங்கினார்.

**(OSCO COMPUTER CENTRE)**
**PP, VVT, KKS, TELLIPPALAI**
**DIPLOMA IN DATAPROCESSING & COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பின் கஷ்டத்தின் மத்தியிலும், 1988, 1989 ஆம் ஆண்டில் G C E., O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு கீழ்க்காணும் சலுகை அடிப்படையில் கொம்பியூட்டர் கல்வி கற்பிக்கப்படும். சேரவிரும்புவோர் (இருபாலரும்) 15-4-1990 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

| G. C. E. பரீட்சை பெறுபேறு (O/L) | (A/L) | செலுத்தவேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 7D | 4A | இலவசம் |
| 6D | 3A | ரூபா 300/- மட்டும் |
| 5D முதல் 3D + 3C | 2A | ரூபா 600/- மட்டும் |
| 3Dக்கு குறைவு சித்திரை 90இல் G C.E. பரீட்சை எடுப்பவர்க்கும் 2Aக்கு குறைவு | | ரூபா 750/- மட்டும் |

ஏனையோர் முழுக் கட்டணமும் இரண்டு தவணைகளில் கட்டலாம். சேரும்போது கட்டுவது ரூபா 600/- (காலம் 3 மாதம்)

வகுப்பு ஆரம்பமாகும் விபரம்

| | இடம் | ஆரம்ப திகதி | நேரம் | நாட்கள் |
|---|---|---|---|---|
| 1) | வல்வைக் கல்விக் மன்றம் (வல்வெட்டித்துறை) | 15-04-1990 ஞாயிறு | காலை 8 மணி | சனி, ஞாயிறு |
| 2) | வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக (பருத்தித்துறை) | 15-04-1990 ஞாயிறு | மாலை 2 மணி | சனி, ஞாயிறு |
| 3) | தெல்லிப்பளை | 16-04-1990 திங்கள் | காலை 8 மணி | திங்கள், செவ் |

மேலும் பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்

1) ஏதேனுமொரு தொழிற் கல்வித் துறையில் சான்றிதழ் இருப்பின் ரூபா 300/ குறைக்கப்படும்.
2) அந்நிய இராணுவத்தின் அட்டூழியத்தின்போது குடும்பத் தலைவர்களை இழந்தவர்களுக்கு இலவசம்.
3) 1983ஆம் ஆண்டு கலவரத்தின் பின் வேலையிழந்தோரது, இராணுவ அட்டூழியத்தின்போது வீடு முற்றாக சேதமாக்கப்பட்டோரது, பாரிய இழப்புடையோரது அல்லது யாதொரு வருமானமுமற்றோருடைய பிள்ளைகட்கு, தற்போதைய குடும்ப சூழ்நிலைக்கேற்ற சலுகை வழங்கப்படும். இதற்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய விலாசம்.

(அ) **S. MAHA, OSCO COMPUTER CENTRE, VVT (Or Point Pedro or Kankesanthurai)**

(ஆ) இடைக்காடு, உடுப்பிட்டி, தொண்டமனாறு, பொலிகண்டி, நவிண்டில், வல்வை மாணவர், வல்வை கல்வி மன்றத்தின் பதிவாளர், திரு. N. இராமகிருஷ்ணனிடம் விபரமறிந்து தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளலாம்:

மேற்குறிப்பிட்ட யாதொரு சலுகைக்குமுட்படாதவர்
முழுக்கட்டணமும் செலுத்தவேண்டும்.

**I. B. M. (PC) COMPATIBLE** இல் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் தகுதிகாண் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
(R.67)

### சிந்தனைக்கு

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 04 · 04 - 90

## மருந்து விலை உயர்வு!

"இன்சுலின்" எனும் நீரிழிவு நோயாளர் பயன்படுத்தும் ஊசி மருந்தின் விலை திடீரென நூறு ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

'இன்சுலின்' ஊசிமருந்து மட்டுமல்ல உயிர்காக்கும் ஊசி மருந்துகள் பலவும் திடீர் திடீரென விலையேறி விடுகின்றன.

இந்த விலையேற்றத்துக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. இன்சுலின் ஊசிமருந்து நூறு ரூபாய் விலை உயர்ந்ததற்கு இந்த மருந்து இறக்குமதி செய்யப்படும் டென்மார்க் நாட்டின் நாணயத்தின் மதிப்புக்கு இலங்கை நாணயத்தின் மதிப்புக் குறைவாக இருப்பதே காரணம் என்று சொல்லப்படுகிறது. மற்றும் பல மருந்துகளின் விலையேற்றத்துக்கும் இதே காரணம் சொல்லப்படலாம்.

மருந்துகளின் இறக்குமதியிலும் விற்பனையிலும் இலாபம் சம்பாதிக்கும் நோக்கமும் இந்த விலையேற்றத்துக்கு மற்றொரு காரணம் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அரசினர் மருத்துவ மனைகளில் நோயாளர்களுக்கு மருந்தும் இலவசமாகவே கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் பெரும்பாலான அரசினர் மருத்துவ மனைகளில் பெரும்பாலும் உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவது சாதாரண சம்பவம்.

அரசினர் மருத்துவ மனைகளிலுள்ள அத்தியாவசிய மருந்துகள் எப்படியோ சில மருந்துக் கடைகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடுவது பல தடவைகளில் கண்டு பிடிக்கப்பட்டுமிருக்கிறது.

அரசினர் மருத்துவமனைகளில் "உயிர் காக்கும்" மருந்துகள் சிலவற்றை வெளியே வாங்கி வரும்படி துண்டு கொடுத்து அனுப்பப்படுவதும் இப்போது சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன.

இந்த மருந்துகள் வெளியில் அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியிருக்கிறது. "உயிர் காக்கும்" மருந்துகளின் உண்மை விலையையோ போலி விலையையோ யார் கவனித்து ஆராய்ந்து கொண்டிருக்கப் போகிறார்கள்?

# டியேகோகாசியா; மையமாகவைத்து இந்து சமுத்திரத்தை கட்டுப்பண்ண பென்ரகன் தீர்மானித்துள்ளது

பென்ரகன், இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் வயிற்றுழகும் பக்கத்தில் அமைந்திருக்கும் டிகோ கார்சியா தீவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. மொறேசியஸ் தீவுக்கு வெகுதூரத்தில் அமைந்திருக்கும் டிகோ கார்சியாவைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீவாக அமெரிக்கா மாற்றியமைந்துள்ளது.

இத்தீவில் B52 விமானங்கள் தரை இறங்கக் கூடிய விமானத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொடர்பியல் சாதனங்களான நிலத்துக்கடியில் இயங்கும் எலக்ரோணிக் கருவிகள், றாடக்கள், செயற்கைக் கிரகங்களை அழிக்கும் இயந்திர சாதனங்கள் ஆகியன பொருத்தப்பட்டுள்ளன.

இந்துசமுத்திரத்திலும் பாரசீக வளைகுடாவிலும் இராணுவ ஆதிக்கத்தையும் தந்திரோபாயங்களையும் பலப்படுத்திக்கொள்வதன் மூலம், இப்பிராந்தியத்திலுள்ள சுதந்திர அரசுகளை பலத்தைப்பாவித்துத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அமெரிக்கா விரும்புவதாக இந்திய அரசியல் ஞானியான பி. என். பானர்ஜி தனது நூலில் குறிப்பிடுகிறார்.

### அணிசேரா நாடுகளும் இந்து சமுத்திரமும்

பல அணிசேரா நாடுகள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக 1971-ல் ஐ. நா. பொதுச் சபை இந்து சமுத்திரத்தை ஒரு சமாதானம் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தியது.

இந்து சமுத்திரத்தை ஒரு சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தியதில் பல நோக்கங்கள் உள்ளன. சகல இராணுவத் தளங்களையும் இந்து சமுத்திரத்திலிருந்து அகற்றுதல், பலாத்காரத்தைப் பாவிக்கப் போவதாகப் பயமுறுத்தலைக் கைவிடுதல், ஆயுத விநியோகத்

ஏற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகளைமேற்கொள்ளுவதற்காக 1974-ல் அணிசேரா நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டன, இதன் விளைவாக 1974ல் நடைபெற்ற ஐ, நா. பொதுச்சபையில் 29.வது தொடரில் இவ்விடம் பற்றிப்பிரஸ்தாபிக்கப்பட்டது இந்து சமுத்திரம் பிராந்தியத்தைச் சமாதானப் பிரதேசமாக நடைமுறைப் படுத்தும் மாநாட்டில் கலந்துகொள்ள சோவியத் ரஷ்யா விரும்பம் தெரிவித்தது ஆனால் அமெரிக்காவும் அதன் நண்பர்களும் மகாநாடு நடையெறுவதற்கு எதிராக முட்டுக்கட்டைகள் போட்டு வந்தனர்.

இந்து சமுசதிரத்தை சமாதானப் பிரதேசமாக மகாநாட்டைக் கூட இதற்கென ஐ. நா. சபையால் நியமிக்கப் குழு 6 முறை முயற்சி எடுத்தது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதாவதொரு உத்தியோகபூர் வமாக காரணங்களை முன்வைத்து அமெரிக்காவும், அதன் சகபாடிகளும் தட்டிக் கழித்தனர்.

இப்போதுள்ள சர்வதேசச் சூழ்நிலையில் இம் மகாநாடு தொடர்பான முட்டுக்கட்டைகள் அகன்று விடும்போல் தோன்றுகிறது.

பெல்கிறேட்டில் சென்ற ஆண்டு செப்டம்பரில் கூடிய அணிசேரா நாடுகளில் மகாநாடும் இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிரதேசமாகப் பிரகடனங்களைநடைமுறைப் படுத்தும் மாநாடுக்குப் பூரண ஆதரவு தெரிவித்தது இதே வேளை ஐ. நா. பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் மகாநாடு வெற்றிபெறாது என்று அணிசேராநாடுகளின் தரப்பில் கூறப்பட்டது

### அமெரிக்காவின் கெடுபிடி

இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியமாக நடைமுறைப் படுத்துவது தொடர்பான குழுவில் அங்கத்துவம் வகித்த அணிசேரா நாடுகள் 1989இல் நகல் தீர்மானம் ஒன்றை 1989 மாரிக் காலத்தில் கூட இருந்த பொதுச்சபைக் கூட்டத்துக்குச் சமர்ப்பித்தது. இதன் பிரகாரம் சர்வதேச மகாநாட்டுக்கு என்று பொதுச் சபையால் 1987, 1988ல் நியமிக்கப்பட்ட திகதிகள் 1990 ஜூலை 3-12க்கும் இடையில் நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தநகல் தீர்மானத்தை அமெரிக்கா மூர்க்கத்தனமாக எதிர்த்தது. அமெரிக்க தூதுக்குழு இந்து சமுத்திரசமாதான பிராந்தியக் குழுவிலிருந்து விலகி மகாநாட்டைப்பற்றி இனிமேல் மௌனம் சாதிக்கப் போவதாகக் கூறியது. அணிசேரா நாடுகள் பிறிதொரு திகதிக்கு மகாநாட்டை நடத்தலாம் என்று சற்று விட்டுக்கொடுக்கும் நிலையிலிருந்த போதும் அமெரிக்கா தன் நிலையிலிருந்து விலகப் பிடிவாதமாக மறுந்தது.

### 1991- இல் மகாநாடு?

பிணக்குகள் உச்ச நிலையை அடைய அணிசேரா நாடான யுக்கோஸ்லாவியா 1991-ல் மகாநாட்டை நடத்தலாம் என்று அணிசேரா நாடுகள் சமர்ப்பித்த நகல் திட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தது. அணி சேரா நாடுகள் ஒரு படி முன்னேறிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், யப்பான் ஆகிய நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. 100 நாடுகள் யுக்கோஸ்லாவியாவின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

அமெரிக்கா பங்குபற்றினாலும், பங்குபற்றா விட்டாலும் கூட மாமுல்படி 1991-ல் மகாநாட்டை நடத்துவதென இறுதியில் ஐ. நா. பொதுச்சபை முடிவெடுத்துள்ளது.

(நன்றி சண்டே ரயிம்ஸ்)

## பனம் பொருள் கண்காட்சி கூடம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணத்தில் பனம் பொருட்கள் காட்சி கூடம் ஒன்றை நிரந்தரமாக இயங்க வைக்க யாழ் செஞ்சிலுவைச் சங்கம் முயற்சிகளை மேற்கொள்கிறது.

பனையின மூலபொருட்களைக் கொண்டு நீண்டகாலம் இருக்கக் கூடிய நுகர்சிப் பொருட்கள் பாவனைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் மற்றும் பலவித பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட செஞ்சிலுவை சங்கம் விரும்பியுள்ளது,

நிரந்தர பொருட்காட்சி மையம் உல்லாச பிரயாணிகளை கவரவும் வியாபாரத்தை பொருக்கவும். இத்தொழில் ஈடுபடுவோருக்கு அதிக சந்தை வாய்ப்பையும் வருவாரையும் கொடுக்கச் செய்யவே இந்நடவடிக்கையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சரவை நியமனம் பற்றி என்னுடன் ஜனாதிபதி ஆலோசனை நடத்தவில்லை

### ஊர்சுற்றி எழுதுவது

பஸ் நிலையங்களில் மல சல கூடம் அவசியம் தேவை !

சமீபத்தில் எனது நண்பர் ஒருவர் தமிழ் நாட்டுக்கு தல யாத்திரை சென்றிருந்தார். தஞ்சைப்பெரிய கோயிலைப் பார்த்துத் தரிசித்து விட்டு அவ்வூரிலுள்ள ஒரு நண்பரைச் சந்திக்கச் சென்றார். உணவு வித்தியாசம் அவருக்கு வயிற்றுக்கோளாறை ஏற்படுத்தியது. அவ்வூரில் மல கூட வசதி மிக மோசம். தண்ணீர் வற்றியஆற்றங் கரைக்கு இரண்டு மைல் நடந்து போக வேண்டும் ஒருவாறு சமளித்துக்கொண்டு மீண்டும் தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்தார் பஸ்சினிலேயே பெரும் அவஸ்தைப்பட்டவர் தஞ்சாவூர் பஸ் நிலையத்திலிறங்கி மல சல கூடத்தை நோக்கி விரைந்தார். மல சல கூடத்துக்கு வெளியே மேசை நாற்காலிபோட்டு ஒருவர்அமர்ந்திருந்தார். மலகூடத்துக்குச்சென்றால் ஒரு ரூபா, சலம் விடுவதானால் ஐம்பது பைசாவாசவும் ஐம்பது பைசாவாகவும் இருக்கும். நண்பர் பணம்கொடுத்துச் செல்லும் பொறுமையில்லை எப்படியோ அவஸ்தை நீங்கி பின்னர் பணம் செலுத்தினார்.

பணம் போனாலும் மலசலகூடம் எந்நேரமும் தண்ணீர் வசதியுடன் சுத்தமாக இருக்கிறது என்று திருப்தி தெரிவித்தார்.

மீண்டும் நண்பர் பயணத்தைத் தொடங்கினார் வயிற்றுக்கோளாறு மீண்டும் பிடித்துப் பெரும் பாடுபடுத்தியது. நடத்துனரிடம் சொல்லி மாயவரத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கி மருந்துக் கடையொன்றில் நிலைமையைச் சொல்லி மருந்து வாங்கியதும் அவர் மலசலகூடம் பற்றி விசாரிக்கவும் பஸ் நிலையத்திலுள்ளேதான் இருக்கிறது என்றுதெரிவித்தார்.

நண்பர் ஓட்டமாக பஸ் நிலையத்தினுள் ஓடினார். உடைந்து சிதைந்துகதவு எதுவுமில்லாமல் கெட்ட நாற்றம் வீசிக் கொண்டு இருளில் ஒரு சிறிய பகுதி

நோயாளிகளின் நலன்கருதி மருந்துகளின் விலைகள் மீது கவனம் செலுத்தவேண்டியது அவசியம். மருந்தும் நல்ல மருந்தாக இருக்க வேண்டும். விலையும் குறைவாக இருக்க வேண்டும்.

நீரிழிவு, இருதய நோய் போன்றவை முன்புதான் ''பணக்காரருக்குரிய வருத்தம்'' என்று சொல்லப் படுவதுமுண்டு. இப்பொழுது இங்கு ஷெல்லடிக்கும் குண்டு வீச்சுக்கும் துப்பாக்கி வேட்டுகளுக்கும் பின்னர் வியாதிகள் ஏழை பணக்காரர் என்ற பேதம் பார்ப்பதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இதேசமயம் நமது சமுதாயமும் எடுத்ததற்கெல்லாம் வில்லைகளும்; கூட்டுக் குளிகைகளும்; ஊசிமருந்துகளும் உபயோகித்துச் சுலபமாக துரிதமாகக் குணமடையலாம் என்ற மனப்பான்மை மலிந்து விட்டது.

மூலிகைகளைக் கொண்ட ஒரு குடி நீரை மூன்று வேளை குடித்து நோயைக் குணப்படுத்திய பரம்பரை வைத்தியத்தை இன்று மக்கள் மறந்துவிட்டார்கள்.

நம்நாட்டு உணவுப் பண்டங்களைச் சரியான முறையில் சாப்பிட்டு வந்தாலே நோய் நம்மிடம் அணுகாது என்று இன்றும் சொல்லும் பழையவர்கள் உதாரணமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

'இன்சுலின்' ஊசிமருந்தை மடியில் கட்டிக்கொண்டு வாயடக்கம் நாவடக்கம் இல்லாமல் கண்டதையும் உண்பவர்களுக்கு யார்தான் என்ன செய்ய முடியும்?

தொடர்புகளை நிறுத்துதல் அணுவாயுதங்களை அல்லது பெருமளவில் சேதத்தை ஏற்படுத்தக் கூடிய இராணுவ உபகரணங்களையும், ஆயுதங்களையும் இப் பிராந்தியத்தில் நிலை கொள்ளாது தடுத்தல் ஆசியா இந்து சமுத்திர சமாதானப் பிராந்தியப் பிரகடனத்துடன் தொடர்புடைய சில முக்கிய அம்சங்களாகும் இக் கைங்காரியத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஐ. நா. பொதுச் சபை 1972ல் இதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட குழுவிடம் கையளித்தது.

இத்து சமுத்திரப்பிராந்தியத்தை சமாதான பிரதேசமாக

## சண்டே டைம்ஸ் செய்திக்கு அமைச்சர் சிறிசேனா குரே மறுப்பு

(கொழும்பு)

புதிய அமைச்சரவை நியமனம் பற்றிய நடவடிக்கைகள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதிலும், ஜனாதிபதி அவரது நெருங்கிய சகபாடிகளுடன் அது குறித்து ஆலோசனை செய்ய விரும்பினார். என 'சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் வெளியான செய்திக்கு வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேனா குரே மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அமைச்சரவை மாற்றங்கள் குறித்து தம்முடன் எந்தவொரு கட்டத்திலும் ஆலோசனை நடாத்தவோ ஆராயவோ இல்லை என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை சுசரித்த இல்லத்தில்இருக்குமாறு ஜனாதிபதி தம்மைக் கேட்கவும் இல்லை எனவும், அது பற்றி தாம் மறுத்ததாகவும், நண்பர்களிடம் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பதும் எந்தவிதத்திலும் உண்மையில்லை என்றும் அமைச்சர் சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

சண்டே ரைம்ஸ் ஆசிரியர் இவற்றைப்பற்றி தம்முடன் கலந்து ஆலோசிக்காமல், வாசகர்களை கவருவதற்காக கேள்வியறிவைக்கொண்டு கற்பனையாக இந்தச் செய்திகளை வெளியிட்டிருக்ககூடாது எனவும் அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சண்டே ரைம்ஸ் ஆசிரியருக்கு எழுத்துமூலமாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது ஆனால் சண்டே ரைம்ஸ் வாராந்த வெளியீடாக இருப்பதால் இதன் ஆசிரியர் மக்கள் மனதில் ஏற்படுத்தப்பட்ட தவறான எண்ணத்தை நீக்கி வைக்கும் வண்ணம் தமது அறிக்கையை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

# குருக்கள்மடம் - அம்பிலாந்துறை புதிய படகு சேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குருக்கள் மடம் - அம்பிலாந்துறைக்குமிடையில் புதிய இயந்திர படகு சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது.

புனர் வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின்கீழ் மேற்படி இயந்திரப்படகு வழங்கப்பட்டது.

சுமார் 11 லட்சம் பெறுமதி வாய்ந்த இவ் இயந்திர படகு நீண்ட காலம் பாவனைக்குரிய வகையால் இருப்பு கேடர்கள் மூலம் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் இவ் வாவியில் மரத்தினால் செய்யப்பட்ட இயந்திரப் படகு சேவையில் ஈடுபட்டு வந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஏற்கனவே இரு இயந்திர படகுகள் வழங்கப்பட்டன.

பண்டூர் - குறுமண்வெளி மண்முனை - கொக்கட்டிச் சோலைசேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. (37)

## எழுதுவினைஞர் சங்கம் புனரமைப்பு

ஆசிரியர்,
ஈழநாதம்,

மார்ச் 25 ஆம் திகதி தங்கள் பத்திரிகையில் எழுதுவினைஞா சங்கம் புனரமைப்புத் தொடர்பாக அதன் செயலாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக மேற்படி யாழ். கிளையின் கூட்டம் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றதாகவும், அதில் நடப்பு வருடப்பொதுக் கூட்டம் நடைபெறஇருப்பதாகவும் அங்கத்தவர்கள் தமது பங்களிப்பைத தரவேண்டுமென்றும் கேட்டிருந்தார்.

மக்கள் மடல்

ஆனால் இச்சங்கத்தின்யாழ் கிளை புனரமைப்புத் தொடர்பான கூட்டம் நடைபெற இருப்பதாக அதன் அங்கத்தவர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டதாகத்தெரியவில்லை உண்மையில் செயலாளர் அங்கத்தவர்களுக்குக் கூட்டம் தொடர்பாக அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்று நினைத்திருந்தால் தற்சமயம் தங்கள் பத்திரிகையில்கூட்டம் நடைபெற்றதை அறிவித்தவர் முன்னர் ஏன் கூட்டம் நடக்க இருந்ததை அறிவிக்கவில்லை? யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கல்வித்திணைக்கள ஊழியர்கள் மட்டுமே கலந்து கொண்டதாகவும், அவர்களுக்கே பதவிகள் வழங்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. ஏன் மற்றைய திணைக்களங்களில் உள்ளவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளத் தகுதியில்லையா? அல்லது அவர்கள் பதவி வகிக்க இருப்பதைத் தற்போதுள்ள செயலாளர் விரும்பவில்லையா?

இறுதியாக ஆண்டுப்பொதுக் கூட்டம் நடைபெறும் வரை தற்போதுள்ள கிளைகளில் பதவி வகிப்பவர்கள் இடைக்காலச் சபையாக இருப்பார்களா? அதற்குப்பின்னர் ஜனநாயக வழியில் தேர்தல் நடைபெற்ற அங்கத்தவர்களைப் பதவிக்குத் தெரிவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமா? என்பதைத் தாய்ச்சங்க செயலாளர் தெளிவு படுத்துமாறு

கோருகின்றேன்.

எஸ். சண்முகலிங்கம்
யாழ்ப்பாணம்.

## எதிர்கட்சிகள் கூட்டு மாநாடு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கூட்டு மாநாடு நாளை 5 ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பப்பட்டுள்ளன. இதற்கு பொலீஸ் அனுமதியும் கிடைத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட கட்சி, தமிழ்க் காங்கிரஸ், தேசவிமுக்தி ஜனதா கட்சி, நவசமசமாஜக் கட்சி, ஆகியனவே இதில் கலந்துகொள்கின்றன.

# காதல் ஜோடிகளுக்கு படமாளிகையில் அறிவுரை

(கொழும்பு)

கொழும்பு படமாளிகைகளில் பல்கணி ஆசனங்களில் இருந்து கொண்டு படம் ஓடும் வேளையில் சல்லாபங்களிலும் சரசங்களிலும் ஈடுபடும் காதல் ஜோடிகளுக்கு சில அறிவுரைகளை வழங்க படமாளிகை உரிமையாளர்கள் முயற்சி செய்து வருகிறார்களாம். ஏற்கனவே படமாளிகை ஒன்றில் பின்வரும் வாசகங்களைக் கொண்ட சிலைட் போட்டுக் காட்டப்படுகிறது. ''திடீர்க் காதலரைப் படம்பார்க்க அழைத்து வராதீர்கள். இதனால் உங்களது உடற்சுகத்தையும் பணத்தையும் இழக்க நேரிடும்.

எயிட்ஸ் நோய் வருவதைத் தடுப்பதற்கு ஒருவரைக் காதலியுங்கள் என்று இன்னுமொரு படமாளிகையில் காதல் ஜோடிகளுக்கு அறிவுறுத்தப் படுகிறது.

கும் இல்லை, தண்ணீரும் இல்லை.

பஸ்நிலையங்களில் மலசலகூடவசதி அவசியம் தேவை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில்முன்னர் மீன் சந்தையோடு ஒரு மலகூடம் இருந்தது. அது நகரத்தையே நாறவைத்தது.

பின்னர் வேறொரு மலசல கூடமும் அமைக்கப் பட்டது. அதுவும் பொருத்தமான இடமல்ல, தொடர்ந்து மின்சார நிலைய வீதியில் சாமி அன்சன்ஸ் நிறுவனத்துக்கு முன்பாக பழைய காரைநகர் பேருந்துத்தரிப்பு நிலையத்துக்கு அருகே பதினாறு கழிவு அறைகளைக் கொண்ட மலசல கூடம் அமைக்கப்பட்டது. இது சுத்தமாகவும் பராமரிக்கப் பட்டு வந்தது பஸ் பயணிகளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

இப்போது இந்த மலசலகூடம் மறைந்து சடைகள் காட்சியளிக்கின்றன.

மீண்டும் இதை மலசல்கூடமாக மாற்றுவது ஒன்றும் கடினமான காரியமல்ல.

மாநகரசபை உடன் இதில்கவனம் செலுத்தி மீண்டும் இதை மலசல கூடமாக்கி அதைச் சுத்தமாகப் பேணுவதற்கும் (சில்லறைகள் வசூலித்தாலும்) நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★

ஈழநாதம்

# மத உரிமை அடிப்படை உரிமை இதை யாரும் கட்டுப்படுத்தமுடியாது

-கரிகாலன்

''மத உரிமை ஒரு மனிதனின் அடிப்படைச் சுதந்திரம். அச் சுதந்திரத்தை எந்த சக்தியாலும் கட்டுப்பண்ணக் கூடாது. அவ்வாறு கட்டுப் பண்ணுவதானால் ஜனநாயகம் மரணித்ததாகவே நாம் கருதுவோம். எமது தாயகத்தின் எந்தவொரு பிரசையும் அடிமை நிலையில் வாழ நாம் அனுமதிக்கமாட்டோம்'' என தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் திரு. கரிகாலன் பள்ளிவாசல் ஜும்மாக்களின் பிரதம மதகுருவான மௌவி அல்ஹாஜ் அப்துல் ராகுப் ஸ்லை அவர்களுடன் 45 நிமிட நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், நாம் ஒரு பக்கச் சார்பானவர்கள் அல்ல. தற்பொழுது வடக்கு கிழக்கில் ஜனநாயகம் மலர உழைத்துக் கொண்டிருப்பவர்கள் எதிர்காலத்தில் ஒரு சுதந்திர மக்கள் ஆட்சியை விடியச் செய்யவே பாடுபடுகின்றோம். எவரும் எவரையும் அடக்கியாளக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு. மண்ணில் நீதியான ஆட்சி நிலை உறுதியான இராணுவ பலமும் அரசிற்குத் தேவை. எம்மிடம் இவை இரண்டும் உள்ளன. நீதியை நிலைநாட்டி நல்லாட்சி நடக்கும் போது நிச்சயம் எமது பக்கம் இன்றும் என்றும் பேரணிகளாகத் திரள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக பத்திரிண ஜும்மா பள்ளிவாசலில் ஒலிபெருக்கி பாவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தடைவிதித்திருந்ததால் முஸ்லிம் மக்கள் தங்கள் மத அனுஷ்டானங்களின் ஒழுங்காக செய்யமுடியாது இருந்ததையிட்டு பெரும் கவலை அடைந்திருந்தனர். இது சம்பந்தமாக அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் தமக்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி வழங்குமாறு காத்தான்குடியின் பல்வேறுபட்ட பதினைந்துக்கு மேற்பட்ட இஸ்லாமிய அமைப்புக்களும் கோரிக்கைவிட்டவண்ணமிருந்தனர். இது தொடர்பாகவே இச்சந்திப்பு இடம்பெற்றது

---

கப்டன் சரத்பாபு நினைவு தூபி திறப்பு

## போராளிகளினதும் தேசபக்தர்களினதும் தியாகமே இன்றைய நிலைக்கு காரணம்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ விடுதலைப் போராட்டமானது சிங்கள இனவெறி அரசுக்கும் இந்திய இராணுவத்திற்கும் எதிராகத் தொடக்கப்பட்டது. இந்திய இராணுவத்தினரது அசுத்தசுவடிகள் அகற்றப்பட்டன. எமது எதிரிகள் பலர் அழிக்கப்பட்டார்கள். தமிழினம் இன்று சுதந்திரமாக வாழ்வதற்கு காரணம் போராளிகளதும் தேசபக்தர்களினதும் தியாகமே'' என நேற்று மாலை சுண்டுக்குளிச் சந்தியில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் சரத்பாபு (நாகேஸ்வரன் சயந்தசிறி) யின் நினைவுத் தூபி திறப்பு விழாவில் வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சனேயர் உரையாற்றும் பொழுது தெரிவித்தார்.

நினைவுத் தூபி திறப்பு விழாவும் நினைவஞ்சலிக் கூட்டமும் திரு. பஹீன் தலைமையில் நடைபெற்றது. திரு. ஆஞ்சனேயர் தொடர்ந்துபேசுகையில் சரத்பாபுவின் தியாக மரணம் நிகழ்ந்த காலம் முக்கியமானது என்றும் எம் மத்தியிலே வாழ்ந்து தமிழ் மக்களின் விடிவிற்காய் உயிர் நீத்த அன்னை பூபதியினதும் தியாகமும் மிகவும் மகத்தானது. என அவர் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் எமது மண்ணில் தான் குறுகிய காலத்தில் அன்னிய

ஆஞ்சனேயர்

இராணுவம் வெளியேறியது. இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையின் மூலம் எமது பலம் உறுதிப்படுத்தப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்திலே விடுதலைப்புலிகள் முன்னை நாள் திருமலைத் தளபதி லெப் கேணல் சந்தோசத்தின் தந்தையார் கணபதிப்பிள்ளை புலவர் வேல் மாறன், விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. தேவன், ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். புலவர் வேல் மாறன் பேசுகையில் தமிழ் நாட்டில் சங்ககாலத்தில் நிகழ்ந்த நடுவர் வழிகாட்டு முறையையும் சங்ககாலதில் நிலவிய பண்பாட்டு மபுரதான் தற்பொழுது தமிழீழத்தில் நிலவுகின்றது என்றும் அவர்கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு. தேவன் பேசுசையில் எமது புராணங்களில் கூறப்பட்ட தேவ அசுர யுத்தங்களைப் போல இந்திய அரக்கர் படை யை அழிப்பதற்குத் தான் சாரத்பாபு போன்ற வீர வேங்கைகள் தோன்றினார்கள். அன்று பெரியவர்கள் விட்ட பிழை தான் இன்று நாம் பல்வேறு இழப்புக்களை சந்திக்க நேர்ந்தது என்றார்.

தலைவரின் தன்நம்பிக்கை விடாமுயற்சி,மனவுறுதி தான் எமது இயக்க வெற்றிக்கு காரணம் என்றார். இச்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர் சரத்பாபுவின் நினைவுத் தூபி மின் சார குமிழ்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

---

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

## பின்தள்ளப்பட்டுள்ளது குறித்து அமைச்சிற்கு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒன்றாகிய யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல் லூரி கடந்த காலங்களில் பின்தள்ளப்பட்டு வருவது குறித்து தொழில் நுட்பக்கல் லூரி மாணவர்கள் உயர் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் தொழில்நுட்பக் கல்லூரி கட்டிடம் திறந்த பல்கலைக்கழகத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது குறித்தும் தொழில் நுட்பக்கல்லூரியை மீள் புனரமைப்பு செய்வதற்காகவும் புதிதாக ஒரு மாடிட்டிடம் எழுப்புவதற்கென. கவும் ஒதுக்கப்பட்ட நிதி யாழ் தொழில் நுட்பக் கல்லூரியை வந்தடைந்தது குறித்தும்.,

மேலும் மாலைநேர வகுப்புகள் நடத்துவதற்கு மின்சார வசதிகள் அற்ற நிலை குறித்தும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கல்லூரி மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர தொழில்நுட்பக் கல்லூரிக்கென ஒதுக்கபபட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் தெற்கில் உள்ள ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில் பாவிக்கப்பட்டு வருவதாகவும் அம்மாணவர்கள் தெரிவித்தனர். (லோ)

---

## முறைசாரக் கல்வி வளர்ச்சிபற்றி சுவிடன் உயர்ஸ்தானிகர் மகிழ்ச்சி!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் பகுதிக்கு விஜயம் செய்த சுவீடன் உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணத்தில் முறைசாரக் கல்வி வளர்ச்சி அடைந்ததை இட்டு வியப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் வடபகுதியில் கடும் பிரச்சினை இருந்த போதிலும் ஏனைய மாவட்டங்களில் அடைந்த வளர்ச்சியிலும் பார்க்க யாழ் பாவட்டத்தில் முறைசாராக் கல்வி மிக திறமையாக வளர்ச்சி கண்டுள்ளதையிட்டு தாம் மகிழ்ச்சியும் அதேநேரம் வியப்பும் அடைவதாக தூதுவர் குழு தெரிவித்தது. அத்துடன் வருங்காலத்தில இப்போது நிலவும் அமைதி நிலைமையைப் பயன்படுத்தி பெரும் முன்னேற்றங்களைக் காண தாம் உதவிகள் புரிவதாக உறுதி அளித்துள்ளதாக முறைசாரா கல்வி பகுதி அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். (லோ)

---

திருமலையில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நர் நளின் செனிவரெத்னாவுடனான மகாநாட்டின் போது, வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தற்காலிக செயலாளர்கள் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் நெருக்கமான உதவியும், அடிக்கடி சிரேஷ்ட அதிகாரிகளும், நிர்வாகஸ்தரும் திருகோணமலைக்கு விஜயத்தை மேற்கொள்வதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மிக விரைவில் நிலைமையை வழமைக்குத் திரும்பலாம் என்று தற்காலிக செயலாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

வெளியிடங்களிலிருந்துமாற்றலாகி வருபவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகக் கடமைக்குச் சமுகமளிப்பதில்லை. ஆனால் இங்கிருந்து மாற்றலாகி வெளிமாகாணங்களுக்குச் செல்பவர்கள், மாற்று ஒழுங்குகள் இல்லாமல் உடனடியாகச் சென்று

---

ஜெயந்தி நகர்...-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயந்திநகர் சிற்றூர் அவைத் தலைவர் திரு. நோபேட் மரியதாஸ் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி, வன்னிமாவட்டப் பிரதிநிதிகள் அரச கூட்டுஸ்தாபன உயர் அதிகாரிகள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இறுதியில் பட்டிமன்றம்,கவி அரங்கம், கலைநிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும். (த)

---

சபைத் திணைக்களத்தை ஸ்தாபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் வடக்கிலும், கிழக்கிலும் மின்சார விநியோகத்துக்குப் பொறும்பான. மின்சார சபைப் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் அல்லது அநுராதபுரத்திலிருந்து செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் கல்முனையில் இருந்து செயற்படுகிறார். ஆனால இவரது தலைமைக் காரியாலயம் திரு

---

## வட பகுதி புகையிரத நிலையங்கள் மீள்நிர்மாணம் பற்றி கணிப்பீடு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய புகையிரத சேவையில் சில முன்னேற்றங்கள் செய்வதற்கு முதற்படியாக குடாநாட்டில் கடந்த கால வன்முறைகளால் சேதமடைந்த புகையிரத நிலையங்களை மீள் நிர்மாணம் செய்வது பற்றி அனுராத புரத்திலிருந்து போக்குவரத்து அதிகாரிகள் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார்கள்.

இவர்கள் அனைத்து புகையிரத நிலையங்களையும் பார்வையிட்டு அவற்றிற்கு தேவையான நிதி உதவியை செய்ய உறுதியளித்துள்ளதாக யாழ்ப்பாண மத்திய புகையிரத நிலைய அதிகாரி தெரிவிக்கிறார்.

ஆர்.எம். திபகரத்ன போக்குவரத்து அத்தியட்சகர் ரி. மூர்த்தி உதவி வாணிக அதிகாரி ஆகியோரே நேற்று முன்தினம் குடாநோட்டிற்கு விஜயம் செய்த அதிகாரிகளாவர். (லோ)

---

வாழைப்பழ..:..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

மும் முயற்சி செய்வதையே இது எடுத்துக்காட்டுகிறதென்றும் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்

---

மட்டக்களப்பு

## தொழில் மீள ஆரம்ப கடனுக்கு 80999 பேர் விண்ணப்பம்

---

## ஆறுகோடிரூபா வடக்கு-கிழக்கு கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி அபிவிருத்திக் ... இந்த நிதியில் மிகுதியிருந்தாலும் அதனையும்புதிய வேலைகளுக்கு பயன்படுத்தக் கூடாது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூபா 4000 தொழில் மீள ஆரம்பித்தல் கொடுப்பனவுபெற 80 999 பேர் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

இத் தகவலை மட்/செயலக புனர்வாழ்வு கிளை நிர்வாக அலுவலகர் திரு. சீ. சத்தியானந்தராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில

மீன்பிடி- 16206, வியாபாரம் சுயதொழில் -23937, விவசாயம்-40847 என இத்தொகை அடங்கும்.

இதுவரை 40887 பேருக்கு தலா ரூபா 4000 என்ற அடிப்படையில் 16கோடி 35 இலட்சம் 48 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஏனையோர் விபரம் தற்போது மறுபரிசீலனையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (37)

---

கென அரசாங்கம் ஆறு கோடி ரூபாவை ஒதுக்கியுளளது.

இந்த நிதியிலிருந்து 1989 ஆம ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்விப்பகுதி வேலைகளுக்கு மாத்திரமே செலவு செய்ய வேண்டும் எனவும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

புதிய வேலைத்திட்டங்கள் எதவுக்கும் இந்த நிதியிலிருந்து செலவு செய்யக்கூடாது என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இதே போல

---

எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## போராடத்திற்கு...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை பூபதி செய்த தியாகம் தலைவர் பிரபாகரனின் தலைமையில் இயங்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூய்மையான உறுதியான சுதந்திரப் போராட்டத்தை வலுவடையச் செய்தது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை இல்லாமல் ஒழிப்பதற்கு தமிழ் மக்களை ஒழிப்பதே சிறந்தவழி என்ற நம்பிக்கையில் இந்திய ராணுவம் திட்டமிட்டு தமிழ்மக்களை அழித்தது; துன்புறுத்தியது. இந்த வேளையில் அன்னை பூபதி தனது மனஉறுதியையும், தமிழ் இனத்தின் விடுதலை உணர்வையும் அகில உலகத்திற்கும் எடுத்துக்காட்டும் நோக்குடன் உண்ணாநோன்பிருந்தார். அவரது தியாகம் இன்று விடுதலைப் போராட்டத்திற்கு வழிகாட்டுகின்றது.

தியாகி திலீபனுக்குப் பின்பு அன்னை பூபதி செய்ததியாகம் அகில உலகத்திலும் இந்திய வல்லரசை தலைகுனிய வைத்தது. உலகநாடுகள் இந்தியாவை ஏழமைசெய்ய வழிவகுத்தது எனக்கூறினார்.

திரு. கே. எஸ். கணபதிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (16

---

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்தம் 5500 வீடுகள்

(கொழும்பு)

பதினைந்து லட்சம் வீடமைக்கும் திட்டத்தின் கீழ்மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் ஐயாயிரத்து ஐம்பது குடும்பங்களுக்கு வருடம் தோறும் வீடுகள் கட்டப்படவுள்ளன.

இதன்படி அடுத்த ஆறுவருடங்களில் இந்த மாவட்டத்தில் முப்பத்தி மூவாயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் கிடைக்கவுள்ளது.

கிராமிய மற்றும் நகர்ப்புற வீடமைப்புத்திட்டத்தின் கீழ் சுமார் ஆயிரத்து இருநூறு குடும்பங்களுக்கு இவ்வண்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சில் இடம்பெற்ற சருத்தரங்கு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

---

## பாராளுமன்றம் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் மீறப்படுவதாகவும், விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் உயர்ந்து செல்வதையும் கண்டித்தே இவர்கள் பாராளுமன்றத்தைப் பகிஸ்கரிக்க உள்ளதாகத் தெரிய வருகின்றது. இதேவேளை குணவர்த்தனாவின் தலைமையில் இயங்கும் மக்கள் ஐக்கிய முன்னணியும் சிலவேளை கலந்துகொள்ளலாமல் விடலாம் என்றும் தெரியவருகின்றது.

## மாகாணசபை--.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் இந்த உயர்மட்ட பேச்சுக்களின்போது விவாதிக்கலாமெனத் தெரிகிறது. அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்குவதுபற்றியும் ஸ்ரீலங்கா அரசு புலிகளுடன் கலந்தாலோசனை நடத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆறாவது சட்டத்திருத்தம் நீக்கப்படாமல் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றுவதில்லை என விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் யாழ்ப்பாண பத்திரிகையாளர் மகாநாட்டில் அறிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## சந்திரிகா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருதப்படுகின்றது. முன்னரே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார நாயகாவிற்கும் மகன் அனுரா பண்டார நாயகாவிற்கும் இடையில் சந்திரிகா தொடர்பான பிரச்சினைகள் உண்டு என பேச்சுக்கள் அடிபட்டதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி ஒ சி குணவர்த்தனா தலைமையில் ஒருபகுதியும், டாக்டர் ராஜித தலைமையில் ஒரு பகுதியும் பிளவு கண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் டாக்டர் ராஜித தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி சந்திரிகாவையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் ஆதரிக்கலாம் எனத் தெரிய வருகின்றது.

---

## நகர வீடமைப்பு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வும், குறிப்பிட்ட நகர அல்லது மாநகர சபையில் நிரந்தரமாக வசிப்பவராகவும், உண்மையான வீட்டுத்தேவையொன்று உடையராகவும், மாதாந்த வருமானம் 2400 ரூபாவுக்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

ஏற்கனவே தேசிய வீடமைபபு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்தோ, வீடமைப்புத் திணைக்களத்திலிருந்தோ அல்லது புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்திடமிருந்தோ வீடமைப்பு நன்மை பெறாதவராகவும் இருப்பதே இக்கடனைப் பெறுவதற்குரிய தகுதிகளாகும்.

அந்தந்த நகரசபை அலுவலகங்களில் கிழமைநாட்களில் காலை 9 மணி முதல் பகல் 12மணிவரை படிவங்கள் வழங்கப்படுவதுடன் ஏற்றுக்கொள்ளப்படும். 24-ஆம் திகதிக்கு பின்னர் அவை நடைபெற மாட்டாது.

---

விடுவதால், பல நிர்வாகச் சிக்கலகள் ஏற்படுவதாக ஆளுநர் செனிவரெட்னா நேற்று முந்தினம் மகாநாட்டில் தெரிவித்தார்.

கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டபடி, வங்கிக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய அதிசிரேஷ்ட அதிகாரிகள் திருமலையில் தமது இருப்பிடங்களை அமைக்க வேண்டும் எனவும், இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று பிரதிச் செயலாளர்கள் தெரிவித்தனர்.

## வங்கிக் கடன்கள்

வடக்கிலும்-கிழக்கிலும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகிய வங்கிகளுக்குப் பொறுப்பான மாவட்ட பொது முகாமையாள்ர் வடக்குக்குக்கும், கிழக்குக்கும் வெளியில் இருப்பதால், இப்பிரதேசங்களில் அபிவிருத்தி முயற்சிகளுக்கு கடன் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் மகாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

மின்சார சபையைப் பொறுத்தவரையிலும் இப்படியான ஒரு சிக்கல் தோன்றியுள்ளதாம். மாகாண அடிப்படையில் ஒரு மின்சார

---

டும் என்றும் நேற்று முன்முன்தினம் மகாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதேவேளை, நிர்வாகத்தில் பாரிய சிக்கல்கள் நிலவும் இச்சந்தர்ப்பத்தில், திருகோணமலைக் கச்சேரியில் ஒரு தகுதி வாய்ந்த கணக்காளர் இதுவரை இல்லை. எமது நிர்வாக திணைக்களத்துக்கும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிக்கும் இதுபற்றி எழுதியும் இதுவரை பதில் எவும் இல்லை என்று கச்சேரி அதிகாரிகள் தெரிவித்தார்கள். இப்போது கணக்காளரின் வேலையை முதலாம் இரண்டாம் தர இலிகிதர்கள் தான் கவனித்து வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஜனசவியத் திட்டம்

மொழிபெயர்ப்பாளர் இல்லாமையினால் திருக்கோணமலையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுக்கு ஜனசவிய கொடுப்பனவுகளைக் 'கொடுக்கமுடியவில்லையென்றும், புனருத்தாரண வேலைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மகாநாடடுத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றனர்.

---

வார்த்தைகளை குழப்புவதற்கும் மீண்டும் நாட்டில் ஒரு இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்கும் அந்நிய சக்திகளுடன் உள்நாட்டிலும் சில சக்திகள் இணைந்து செயல்படுவதாகவும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

ஆனாலும் இந்தத் தீய சக்திகளுக்கு இடமளிக்காத வகையில் விடுதலைப் புலிகளை மிக அவதானமாகவும் விழிப்புடனும் நடந்துவருவதாகவும் கிழக்கு இலங்கையில் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சவளக்கடையில் பொலிசார் பீதி!

கல்முனைப்பகுதியைச்சேர்ந்த சவளக்கடையில் இரண்டு தினங்களுக்கு முன்னர் மின்சாரம் திடீரெனத் தடைப்பட்ட போது சவளக்கடைப் பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸ்காரர் சரமாரியாக வேட்டுக்களை தீர்த்தனர். இதனால் ஒரு பொலிஸ்காரர் காயமும் அடைந்தார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

அதேவேளை தென்னிலங்கையில் உள்ள சில தீய சக்திகள் கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் வளர்ச்சியடைந்துவரும்நெருக்கமான உறவுநிலைகளை சீர்கெடுக்கும்நோக்கத்துடனேயே இவ்வாறு செய்திகளைப் பரப்புவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தாதாடு இச் சமூக விரோதசக்திகள் சம்பந்தமாக தமிழ் முஸ்லிம் மக்கள் மிகவும் எச்சரிக்கையாகஇருக்க வேண்டும் எனவும் விடுதலைப்புலிகள் கோரியுள்ளனர்.

---

# நிதர்சனம் பற்றிய கலந்துரையாடல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைத் தொடர்பு சேவையான நிதர்சனம் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் ஐந்தாம் திகதி பிற்பகல் 5·00 மணிக்கு இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் உள்ள நிதர்சனம் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கலைஞர்களும், கலைத் துறையில் ஆர்வம் உள்ளவர்களும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது